# தமிழரசு

1-5-1992 ரூ.1




# FOR FORMAL WEAR



- ★ Pure Khadi Silk Sarees
- ★ Khadi Cotton and Polyester Varieties
- ★ Readymades

PLEASE VISIT

**Khadi Kraft**

Tamilnadu Khadi & Village Industries Board, Kuralagam, Madras-600 108.

# இந்த இதழில்...


அருங்காட்சியகக் கலைவிழா ... 2
சர் பிட்டி தியாகராயர் ... 6
மே நாளில் சிந்திப்பீர் —புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ... 9
பக்கிங்காம் கர்னாடிக் பஞ்சாலை மீண்டும் திறப்பு ... 11
தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் - பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலங்கள்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 15
கபாலீசுவரர் கோயில் திருக்குளச் சீரமைப்பு ... 17
மகளிர் காவல் நிலையம் ... 19
பாட்டாளி உழைப்பினிலே! (கவிதை) ... 23
அனைத்துக் காவலர்க்கும் குடியிருப்பு வசதி ... 24
மரம் வளர்ப்போம்! ... 27
வளரும் வேளாண்மை ... 30
சத்யஜித்ரே மறைவு ... 48


## மேலான மே நாள்



—பேரறிஞர் அண்ணா

அகில உலகமெங்கும் அக மகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மேதின விழாவைக் கட்சி - கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சி யின் இடையிலே ஓர் நாள் ஒய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங் காலக் கணக்கைப் பார்க்கும் திரு நாளே இம் மேநாள். சென்ற காலங் களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மேநாள் பயன் படுகின்றது.

## திருநாள் - பெரு நாள்!

—டாக்டர் எம்.ஜி.ஆர்.



தொழிலாளர் வட்டாரங்களில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த இந்த மே நாள் தமிழகம் முழுவதும், தமிழ் நெஞ்சங்கள் முழுவதும் கொண்டாடும்படி தனது பேனா வாலும், நாவாலும் கிளர்ச்சி ஊட்டிய பெருமை மட்டுமன்று, அரசுக் கட்டிலில் ஏறிய பிறகு, மே நாளைக் கட்டாய விடுமுறை நாளாக்கிய பெருமையும் பேரறிஞர் பெருந்தகை அமரர் அண்ணா அவர்களுக்கே உரியதாகும்.

தொழிலாள வர்க்கம் தனது கூலி உயர்வுக்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும் மட்டுமே போரா டும் தன்மை படைத்தது என்ற நிலையை மாற்றி, மொத்த சமுதாயத் தின் உயர்வுக்காகவும், சமத்துவ சமுதாயம் அமைப்பதற்காகவும் போராடும் முன்னோடிகளாகத் தொழிலாளர்கள் விளங்க வேண்டும்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

சித்திரைத் திங்கள் - 19

மலர்:22 இதழ்:21

1-5-1992






# அருங்காட்சியகக் கலைவிழா

அருங்காட்சியகக் கலைவிழா, 14.4.92 அன்று, சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைச் சுற்றிப் பார்த்தார்.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தலைமை அஞ்சல்துறைத் தலைவர் திரு. எம்.எஸ்.இராகவன், இ.அ.ப., செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., இண்டாக் நிறுவனத் தலைவர் திருமதி தெபோரா தியாகராசன் ஆகியோர் பேசினர்.

சிறப்பு அஞ்சலுறையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கலைப் பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் பொன்னாடை அணிவித்தார். அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. இராமன் இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

## மாண்புமிகு முதல்வர் உரை

தென்னகக் கலைப் படிமக் கண்காட்சி, பல்லவபுரம் தென்னகக் கலை நகரமைவுத் திட்டம், நினைவு அஞ்சலுறை வெளியீடு, கலை பண்பாட்டு இயக்ககம்- முத்தமிழ்க் கலைவிழா ஆகியவற்றைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

தமிழ்ப் புத்தாண்டு மலர்ந்துள்ள சித்திரைத் திங்கள் இரண்டாம் நாளாகிய இன்று, தமிழக அரசின் அருங்காட்சியகத் துறை, நம் அனைவரின் நினைவுகளிலும், தொடர்ந்து நிலைத்து நிற்கக்கூடிய சாதனை ஒன்றினை, சாதித்துக் காட்டியுள்ளது. கடந்த 140 ஆண்டுகளாக, நீடித்த புகழோடு திகழ்ந்துவரும், இந்த அரசு அருங்காட்சியகத்தின் அரங்கம், இன்று முதல் குளிர்சாதன வசதியினைப் பெறுவதோடு, தமிழகத்தில் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு, தங்களது கலைத் திறமைகளை வெளிக் காட்டுகிற நல்வாய்ப்பினை வழங்கும் பணியினையும், தொடங்குகிறது.

இனி இந்தக் கலையரங்கத்தில், வாரம் இரண்டு கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த, அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த விழாக்களுக்கு மகுடம் சூட்டுவதுபோல, இன்று தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைத் திறந்து வைப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அரசு அருங்காட்சியகம், சாதாரண மக்கள் பார்த்துப் பலனடையும் பார்வைக் கூடமாகவும், கற்றோருக்கு மேலும்

சிந்தனையைத் தூண்டும் அறிவுக் கூடமாகவும், ஆராய்ச்சி அன்பர்களுக்கு ஆய்வுப் புதையலாகவும் அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, பதினெட்டாம் நூற்றாண்டுவரை, பல்வேறு தென்னிந்தியச் சிற்பக்கலை விற்பன்னர்கள் உருவாக்கிய படிமங்கள், இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கற்காலம், உலோகக் காலம், தற்காலம் என்ற எல்லாக் கால எல்லைகளுக்கும் உரித்தான பொருட்களும், பல்வேறு சமய சிற்பங்களையும் கொண்ட, அரிய கலைப் பொருட்களின் தொகுப்பு, இந்த அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

**கல்லும் சொல்லாதோ கவி!**

நான் சிறுமியாக இருந்தபோது, என் அன்னையாரோடு இங்கே வந்து, சிற்பங்களையும் கலைப் படிமங்களையும் கண்ணுற்ற நிகழ்ச்சி, இப்போதும் என் நினைவில் நிழலாடுகிறது.

அனைத்து வளங்களும் மலிந்த நமது தமிழகத்தில், நமது முன்னோர்கள், தங்களுடைய சந்ததியினருக்கு விட்டுச் சென்ற அழியாச் சொத்துக்களில், கண்கவர் கோயில்களும், கவின்மிகு எழிற்சிற்பங்களும், இன்றும் நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்தும் பேறு பெற்றவை.

'கல்லும் சொல்லாதோ கவி' என்றும், 'செம்பும் பேசாதோ செழுந்தமிழை' என்றும், புலவர் பெருமக்களால், புகழ்ந்து பாடப்படுகின்ற அரிய கலைப் படிமங்கள், உலகின் ஈடற்ற கலைச் செல்வங்களாக, நமக்குப் பெருமை அளிக்கின்றன.

பேரறிஞர் Arnold Toynbee, உலக நாகரீகங்களிலேயே பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குவன, தமிழ் நாகரீகமும், சீன நாகரீகமும் என்று கூறியுள்ளார். அதேபோல, தென்னகக் கலைப் படிமங்களின் வடிவமைப்பையும், கைத்திறனையும், கண்டு வியந்த அறிஞர்கள், இவற்றை சுமேரிய நாகரீக காலத்தில் கிடைக்கப்பெற்ற, எஃகுப் படிமங்களோடும், நைல் நதி நாகரீகக் காலத்தில் கிடைக்கப்பெற்ற, தங்கப் படிமங்களோடும் ஒப்பிட்டு, வியப்படைந்துள்ளார்கள்.

**உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்கள்!**

உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்களையும், சிலைகளையும் வடிப்பதில், நமது தமிழக மக்கள், தலைசிறந்து விளங்கினார்கள். மண், மரம், சுதை, செங்கல், கல், பளிங்கு, தந்தம், பித்தளை, வெண்கலம், செம்பு, இரும்பு, பொன், ஐம்பொன் போன்ற பல பொருட்களால், சிலைகள் வார்க்கப்பட்டன; சிற்பங்கள் செதுக்கப்பட்டன; படிமங்கள் சமைக்கப்பட்டன. நவீன






உலோகவியல், அதாவது Metallurgy -யின் நுணுக்கங்களையெல்லாம் அன்றைக்கே நம் தமிழர், இந்துச் சிலைகளை வடிப்பதில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியும் போது, நாம் பெருமையும், பெருமிதமும் கொள்கிறோம்.

நம்நாட்டுச் சிலைகள், சிற்பங்கள், கலையழகு வாய்ந்தவை, நேர்த்தியானவை என்பது, நிலைபெற்றுவிட்ட உண்மை. ஆனால், அவைகளுக்கு மேலும் தனிச்சிறப்புகள் உண்டு. நாம் அவற்றைக் கண்ணுறும்போது, அவை வெறும் உருவங்கள் மட்டும்தான், என்று நம் மனதில் தோன்றாது. அவை நம்மை ஆன்மீக உணர்வுக்கு, அழைத்துச் செல்லும் வழிகாட்டி என்கிற நிம்மதியையும் வழங்குகின்றன. சரியாகச் சொன்னால், நமது சிற்பங்கள், அயல்நாட்டுச் சிற்பங்களைப் போன்று, வெறும் காட்சிப் பொருளாக இல்லாமல், கடவுளின் பெருமைகளைப் போதிக்கும் காட்சிப் பொருள்களாகவும் அமைந்திருக்கின்றன. கடவுள் நம்பிக்கை, நம்மவர்களின் வாழ்க்கை முறையில் இயற்கையாகவே ஏற்பட்ட பற்று, பாசமாகும்.

**தொழில் நுட்பத்தின் சிகரம்**

அதனால்தான், நம் முன்னோர்களின் கற்பனையில் உதித்த வடிவங்களில் எல்லாம், கடவுளர் சிலைகளை உருவாக்கிப் பார்த்தனர். ஒவ்வொரு தெய்வத்திற்கும், புராணங்களில் வர்ணிக்கப்படும் பல்வேறு உருவங்களை, கல்லால் வடித்து மகிழ்ந்தனர். இந்த வகையில் பார்த்தால், சிவபெருமானுக்கு மட்டும் 25 வடிவங்கள் இருக்கின்றன. திருமாலுக்கு நாராயணன், மாதவன், கோவிந்தன், அனந்தசயனன் முதலிய

பல வடிவங்கள் உள்ளன.

இப்படி வடிக்கப்பட்ட தெய்வ உருவங்களிலேயே, அமைதியின் வடிவமாகத் திகழும், நடனமாடும் நடராஜர் சிலை, உலகப் பிரசித்தி பெற்றது என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஆடல் சிறப்பும், அமைதியான அழகும் கொண்ட, நடனமாடும் நடராஜர் சிலையைக் கண்டு, உலகில் வியக்காதவர்களே இல்லை. தஞ்சை, திருவாலங்காட்டிலே உள்ள நடராஜர் திருமேனி, அனைத்து உருவங்களிலும், முழுமையும் அழகும் வாய்ந்தது என்று, அறிஞர்கள் பாராட்டுகின்றனர். Cosmic Dance என்று போற்றப்படும் இவ்வடிவம், சிற்பமாக மட்டும் இல்லாமல், தத்துவமாகவும், கணிதமாகவும், கலைத் தேர்ச்சியின் முடிவாகவும், தொழில் நுட்பத்தின் சிகரமாகவும் அமைந்திருப்பதை, அறிஞர் ஆனந்த குமாரசுவாமி போன்றவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை, இங்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்னும் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சை திருவெண்காடு அர்த்தநாரீஸ்வரர், ராம லட்சுமணர், நடனமாடும் கணேசர், ரிஷப வாகனர் சிலைகளும், இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. நாகப்பட்டினத்தில் கிடைக்கப் பெற்ற, சரித்திரப் புகழ் வாய்ந்த புத்த விக்கிரகங்கள், அரிய கலைப் பொக்கிஷங்கள் ஆகும். அவைகளும் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. மேலும், இக் கண்காட்சிக்குப் பொலிவூட்டுவதாக அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,600 வெண்கலச் சிலைகள், கற்சிற்பங்கள், விக்கிரகங்கள், கவின்மிகு கண்ணாடிப் பேழைகளில் இங்கே இடம் பெற்றுள்ளன.

## திருக்கோயில் பாதுகாப்புப் படை

இத்தகைய கலைக் கருவூலங்களைப் பார்த்து மகிழ்வதோடு, அவற்றைப் பாதுகாப்போடு, வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்வது, நம்முடைய தலையாயக் கடமையாகும்.

அந்த நோக்கத்தை நிறைவு செய்கிற வகையில்தான், வெண்கலப் படிமங்களைப் பாதுகாக்க, 'உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம்', திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற 3 மையங்களை, மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அமைக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நம்முடைய வரலாற்றுப் பெருமையின் சிறப்பு அறியாத சிலர், நம் நாட்டு கலைப் பொக்கிஷங்களை, வெறும் உலோக மதிப்பிற்கான விலைக்கு மட்டுமே விற்க முற்படுவதால், அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி, ஒரு சாரார் மேலை நாடுகளுக்குக் கடத்திச் சென்று, அவற்றை விற்று விடுகின்றனர்.

இப்படிக் களவாடப்பட்ட கற்சிலைகளும், செப்புத் திருமேனிகளும், மேலை நாடுகளில் தனிப்பட்டவர்களின் வீடுகளிலும், விடுதிகளிலும், காட்சியகங்களிலும், அலங்காரப் பொருட்களாக வைக்கப்பட்டிருப்பது, நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவை மீட்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, தமிழகத்திலிருந்து அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட, பத்தூர் நடராஜர் செப்புத் திருமேனி, இப்படித்தான் மீண்டும் கொண்டுவரப்பட்டு, திருக்கோயிலுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதற்காகவே, பழமை வாய்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்

# மேதினி விழித்தது மேதினம் பூத்தது!

—பேரறிஞர் அண்ணா



**இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டவர். ஆண்டை - அடிமை, உயர்ந்தவன் - தாழ்ந்தவன், மதகுரு - பக்தன், மிராசு - உழவன், பிரபு - பணியாள், முதலாளி - தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.**

**இந்தப் போராட்டங்களில் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள் - முதலாளிகள் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு, ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது. நலிவுற்ற உள்ளத்தைப் புலியுள்ளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக் கக்கின; மேதினி விழித்தது; மேதினம் பூத்தது.**

**ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமுகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும் பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டுதிட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்!**

கென, தனியாக, திருக்கோயில் பாதுகாப்புப்படை அமைக்கப்படவுள்ளது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளால் மட்டுமே, நமது கலாச்சாரம் அயலாருக்கு விலைபோவதை, தடுத்துவிட முடியாது. உண்மையில் கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்க வேண்டுமானால், நம் மூதாதையர்களின் ஒப்புயர்வற்ற வாழ்வும், பெருமையும், வரலாற்றில் இடம் பெறுவதோடு, அந்த வரலாற்றின் ஆதாரங்களாக உள்ள சிலைகளும், படிமங்களும், கட்டிக் காக்கப்பட வேண்டும்; அந்த வரலாற்றின் உண்மைகள் தொடர்ந்து, இன்றைய சந்ததியினருக்கும் கற்றுத் தரப்பட வேண்டும். இந்தக் குறிக்கோள்களை நிறைவு செய்யவும், அதற்கான சூளுரை ஏற்கவுமே, இன்று நான் தொடங்கி வைத்திருக்கின்ற தென்னகக் கலைப் படிமக் கண்காட்சி, என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள சிற்பங்களின் வண்ணப் படங்கள் அச்சிடப்பட்ட போஸ்ட் கார்டுகளும், வெளியிடப்பட்டுள்ளன.

**பல்லவபுரம்**

இவ்விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்க்கிற வகையில், இவ்விழா, ஐம்பெரும் விழாவாக இங்கே கொண்டாடப்படுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வரிசையில் அடுத்து, 9-ஆம் நூற்றாண்டில், ஓங்கி வளர்ந்து, சிறப்புற்றிருந்த பல்லவப் பேரரசின் பண்பாட்டைச் சித்திரிக்கும் வண்ணம், சென்னை மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ள முட்டுக்காட்டிற்கு அருகில், 'பல்லவபுரம்' அமைக்கும் திட்டத்தையும் துவக்கி வைப்பதில், மகிழ்ச்சி அடைகிறேன். தென்னிந்தியக் கலாச்சாரங்களை வெளிப்படுத்தும், மத்திய அரசுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தப் 'பல்லவபுரம்' திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு, 5 ஏக்கர் நிலத்தையும், ரூ.15 இலட்சத்தையும் வழங்கியுள்ளது. இந்தப் 'பல்லவபுரம்' அன்றைக்குப் பல்லவப் பேரரசில் இயங்கிக் கொண்டிருந்த, ஒரு கிராம வாழ்க்கைச் சூழலை, அதன் சிற்ப வேலைத் திறத்தோடு சித்திரிக்கும் வண்ணம் அமையும், என்று நான் நம்புகிறேன். மேலும் இந்த அரங்கத்தில், வாரம் இருமுறை நடக்க இருக்கும் கலை நிகழ்ச்சிகளையும், இன்று துவக்கி வைப்பதில் பெருமிதம் அடைகிறேன்!

**ஒரே குடையின் கீழ்...**

கலை, கலாச்சாரத்தின் பல்வேறு அம்சங்களில் நடைபெற்று வரும் அரசுப் பணிகளை, ஒருங்கிணைத்து, ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தி, அதன்மூலம் நிறைந்த பயனை மக்களுக்கு விளைவிக்க வேண்டும் என்ற கருத்தில், கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த அத்துணை அமைப்புகளையும், ஒரு குடையின்கீழ் கொண்டு வர எங்கள் அரசு தீர்மானித்தது. அதற்கெனத் தனியாக ஒரு இயக்குநரகத்தையும் அண்மையில் ஏற்படுத்தியது. அதையும் இன்று நான் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!

நமது முயற்சிகளுக்கு முகமன் கூறுவது போல, இந்திய அஞ்சல் துறையினர், இந்த நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பளிக்கும் வண்ணம், சிறப்புத் தபால் உறை ஒன்றை வெளியிட்டுள்ளது, வரவேற்கத்தக்கதாகும். இதற்காக நான் அத்துறையினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தொடங்கி வைக்கப்பட்ட ஐம்பெரும் விழாவில் கலந்து கொண்டு, நம் கலாச்சாரத்தின் தொன்மையையும், சிறப்பையும் பார்த்துப் பெருமிதம் அடைவதோடு, அவைகளைப் பாதுகாக்கிற பணியினையும் நாம் மேற்கொள்ள, உறுதியேற்க வேண்டுமென அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்புரைக்குப் பிறகு, செல்வி இலட்சுமி விசுவநாதன் அவர்களின் நாட்டியக் கலை நிகழ்ச்சி நடந்தது. அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. ம.இராமன் இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு

**— பி.வி. கிரி**



## உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் திருநாள்

### மாண்புமிகு முதல்வர் அவர்களின் மே தின வாழ்த்துச் செய்தி

**உழைப்பவர்களின் பெருமையை, உலகெங்கும் பறைசாற்றி, உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் திருநாளாக மே தினம் மிளிர்கிறது. உழைப்பவர்கள் தங்களது உரிமைகளை நிலைநாட்டிட, துணிவோடு கிளர்ந்தெழுந்த தோழர்களின் முழக்கம், உலகம் தழுவிய உரிமை கீதமாகப் பரவிய நாள் தான் மே தினம்.**

**உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் விடுதலைக்கு வித்திட்ட சக்தியாகவும், ஆதிக்க மேலாண்மையை வீழ்த்துகின்ற ஆயுதமாகவும், தொழிலாளர்களின் உழைப்பும் பணியும் பெருமையோடு இடம்பெற்றுள்ளன.**

**அத்தகைய உழைப்பாளிகளின் நினைவைப் போற்றுகின்ற வகையிலும், அவர்களது தியாகத்தை மதிக்கின்ற வகையிலும், மலர்கின்ற மே தின நன்னாளில், உழைக்கும் வர்த்தகத்தினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

# சர். பிட்டி தியாகராயர்

சா. பழநியப்பன்



திராவிட சமுதாயச் சிற்பிகளில் குறிப்பிட்டுப் பாராட்டத்தக்க பெருமை பெற்றவர் வெள்ளுடைவேந்தர் சர். பிட்டி. தியாகராயர் ஆவார்.

தேவாங்கர் வகுப்பில் 1852-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர் பிறந்தார். இதற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்தான் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்பட்டது.

இவருடைய முன்னோர்கள் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர்மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார், இவர். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலை வாய்ப்புத் தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார், செல்வமும் செல்வாக்கும்பெற்ற குடும்பத்தவரான சர்.பிட்டி. தியாகராயர்,

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் பண்டைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார், இவர். தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்றிதழையும் பதக்கங்களையும் பெற்றது.

தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் இருவரும் ஒருவர். அச்சபையின் தொடக்க காலமான 1910-லிருந்து 1921-ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் வளர்ச்சிக்கும் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்பும் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

செங்கல்வராய நாயக்கர் தொழிற் பயிற்சிப் பள்ளியின் நிர்வாகக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இருந்து அப்பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார். அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுக்காலம் இருந்து, அந்த நிறுவனங்களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்கேற்றார்; சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். நாளடைவில் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு, அவர் உள்ளம் வேதனையடைந்தது. அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தம்மின மக்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து அவதிப்படுவதைக் கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சியுற்ற சமுதாயத்துக்கு எழுச்சியூட்ட, அவரும் டாக்டர் டி.எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையை-பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை-1916 நவம்பர் 20-ஆம் நாள் சர் தியாகராயர் தமது கையெழுத்திட்டே வெளியிட்டார்.

அந்த அறிக்கை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதிய பாதை அமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, அல்லும்

வெள்ளுடை வேந்தர் சர் பிட்டி தியாகராயரின் 141-வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

பகலும் அயராது உழைத்தார் செயல் வீரர் தியாகராயர்.

ஒரு வகுப்புமீது மற்றொரு வகுப்பு ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க, வகுப்புகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தொடங்கியது. கடைசியில் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றது.

1920-ஆம் ஆண்டில் அப் போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக் கட்சியினர் வெற்றிவாகை சூடினர்.

சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் லார்டு வெல்லிங்டன், முதலமைச்சர் பதவியேற்று அமைச் சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று வெற்றி பெற்றவரும் நீதிக் கட்சித் தலைவருமான தியாகரா யரைக் கேட்டுக்கொண்டார்; ஆனால், தியாகராயர் பதவி ஏற்க மறுத்துவிட்டுத் தனது கட்சிப் பிர முகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து அமைச்சரவை அமைக்கச் செய்தார். அவர் ஆளு நருக்கு எழுதிய கடிதத்திலும், நேரில் சந்தித்துக் கூறியதிலும் குறிப்பிட்ட தாவது:

'இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக் களைத் தட்டி எழுப்பிய பாவத்துக் காக என்னையும், அகாலமரண மடைந்த என் அருமை துணைத் தலைவர் டாக்டர் டி.எம். நாயரை யும் வெள்ளையரின் வால் பிடிப்ப வர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும் அவர்களுடைய பத்திரி கைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம் விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்கமாட்டேன்; மன்னிக்க வேண்டும்.' சர்.பிட்டி. தியாகரர்யரின் இந்த அறிவிப்பு எதிரிகளையும் வியக்கச் செய்தது.

இந்திய வரலாற்றில், முதல் பொதுத் தேர்தலில் தனது நீதிக் கட்சி வெற்றி வாகை சூடியது கண்டு பூரித்துப் போனார் தியாகராயர்.

> • எங்கு மிக உயர்ந்த உண்மைகள் நடைமுறைக் குக் கொண்டு வரப் படுகின்றனவோ அதுவே மிக உயர்ந்த சமுதாயமாகும்.
>
> - சுவாமி விவேகானந்தர்

தியாகராயர் சென்னை மாநகராட் சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் தொண்டு புரிந்திருக்கிறார். 1919-ஆம் ஆண்டு பிறப்பிக்கப் பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் தலைவரா வார் அவர். அந்த ஆண்டிலிருந்து 1923-ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலை வராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னாரின் தூய தொண்டி னைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909-இல் ராவ்பகதூர் பட்டத்தையும், 1919-இல் திவான் பகதூர் பட்டத்தையும், 1921-இல் சர் பட்டத்தையும் வழங்கிச் சிறப் பித்தது.

---

# மதுரை-மணியாச்சி அகல ரயில்பாதை

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

கரூர் - திண்டுக்கல் - மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதைத் திட்டத்தை அமல்படுத்தும்பொழுது, ஏற்கெனவே மதுரை- மணியாச்சி இடையே உள்ள Metre Gauge Line-ஐ அப்புறப்படுத்தி அகலப் படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவு, நமது மாநிலத்தின் தென் மாவட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் நிலையை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கெனவே மதுரைக்கும் தூத்துக் குடிக்கும் இடையே மணியாச்சி வழி யாக உள்ள Metre Gauge ரயில் பாதையை அப்புறப்படுத்தி அகலப் படுத்தினால், தூத்துக்குடி, திரு நெல்வேலி பகுதிகளில் இருந்து தற்போது நேரடியாகச் சென்னை வந்து சேரும் 9 ரயில்கள் ரத்து செய்யப்படுவதுடன், சென்னை வரும் பயணிகள், கூடுதலாக 104 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் பிரயாண நேரம் மட்டு மன்றி ரயில் கட்டணமும் கூடுதலாகும்.

Broad Gauge Line அமைத்துக் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், ஏற்கெனவே இருக்கின்ற வசதிகளை இழக்க வேண்டும் என்ற முடிவுதான் ஏற்புடையதாக இல்லை.

இது குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 11.2.1992 அன்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. சி.கே. ஜாஃபர் ஷெரீப் அவர் களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மதுரைக்கும் மணியாச்சிக்கும் இடையே உள்ள Metre Gauge Line-ஐ அப் புறப்படுத்தாமல் அப்படியே வைத் துக் கொண்டு திட்டமிட்டவாறு Broad Gauge Line-ஐயும் தனியாக அமைக்க வேண்டுமென்று கேட்டு இருந்தார்.

மத்திய ரயில்வே அமைச்சர் அவர்களின் 20.4.1992 தேதியிட்ட பதில் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள குறிப்பில், Metre Gauge Line - Broad Gauge Line ஆக அகலப்படுத்தப்படும் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. Metre Gauge Line-ஐ தொடர்ந்து வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பது அதன் மூலம் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இப்பிரச்சினை, தென் மாவட்ட மக்களைப் பெரிதும் பாதிப்பதாக வும், அவர்களுக்குக் கூடுதல் பயண நேரத்தையும், கூடுதல் பிரயாணச் செலவையும் ஏற்படுத்துவதாக அமை வதோடு, தற்போது இருக்கின்ற வசதிகளைக் குறைப்பதாக இருப்ப தால், இது குறித்து மத்திய அர சினை அணுகி தற்போதுள்ள Metre Gauge Line-ஐ அகலப்படுத்தாமல் தனியே ஒரு Broad Gauge Line அமைக்க வேண்டும் என்று எங்கள் அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(சட்டப் பேரவையில் 28.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர் களின் அறிவிப்பு)**

அந்நாளில் சர். பிட்டி. தியாகராயர் செய்த அறச்செயல்களுக்கு அளவே இல்லை. துன்புற்ற பல குடும்பங்களை இன்புற்று வாழச் செய்தார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வேதனை நீக்கினார்.

இத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் 1925-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ஆம் நாள் அன்று, தமது 73-வது வயதில் இயற்கை எய்தினார்.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத்தெளிவுக்கும் உணர்ச்சி வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர் அண்ணல் தியாகராயர் ஆவார்.

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலே, தாழ்வுற்று வறுமைமிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காகச் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதிபெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட சமூகநலத் தொண்டர் சர். பிட்டி. தியாகராயர். சீரிய அரசியல்வாதியாகவும் புகழ்மிக்க சட்டப்பேரவை உறுப்பினராகவும் தேர்ந்த ஆட்சியாளராகவும் வர்த்தகத்தில் பெருமை பெற்ற தீரராகவும் வாழ்ந்துகாட்டிய வள்ளல் பெருந்தகை அவர்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி நவீன முறையில் தழைத்திடவும் முக்கியப் பகுதிகளில் புதிய இரயில் பாதைகள் அமைத்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடையவும் இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாகப் பயன்படவும் பெரிதும் உழைத்த உத்தமர் அவர். 1914-1915-இல் முதல் உலகப்போர் மூண்டிருந்த வேளையில், இறக்குமதித் தட்டுப்பாட்டைச் சமாளிக்க எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கலாமென்னும் உயரிய ஆலோசனைகளை வழங்கிய பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தவர்.

இந்தியக் கப்பல்துறை, கப்பல் கட்டும் பணியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு வழிவகைகளைத் தெரிவித்து ஆக்கம் தேடியவர் தியாகராயர். தொழில்களின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவை மட்டும் தரும் கல்வியை அவர் சாடினார். தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார்.

கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாட்டில் செல்வ வளம் பெருக்கத் தக்க கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர். நமது கல்வி முறையிலே மாற்றம் ஏற்பட்டுத் தொழில்நுட்பக் கல்வி, தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்பட வேண்டுமென்று விரும்பியவர் அவர். பல ஆண்டுக்காலம் சென்னை மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்து தேசிய நலப்பணிகளுக்கு ஊக்கமூட்டிய சீலர் தியாகராயர்.

பேரறிஞர் அண்ணா அவர்களே கூட தியாகராயரின் சமூகப் பணிகளால் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால்தான் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். 30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் சர். பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அவரது உயரிய தன்மை பற்றி-

"சர். தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்!"

- எனத் தொடங்கிப் பலபடக் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்.

வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயரின் 141-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள சர்.பிட்டி. தியாகராயரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (27.4.1992).





மே நாளில் சிந்திப்பீர்!
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
''பேரன்பு கொண்டோரே, பெரியோரே, என்
பெற்றதாய் மாரே, நல் இளஞ்சிங் கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைநதுபெருங் காடாக்கப், பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார், அழகு நகருண் டாக்கி!
சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

## பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில்

# சமூக நலப்பணிகள்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டச் சமூகநலத்துறை பெண்களின் மேம்பாட்டிற்கும், உடல் ஊனமுற்றோர்கள் மறுவாழ்வு பெறவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

1991-92-ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக் கான அரசின் குறியீட்டை அடைந்து இத்துறை சாதனை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டிற்குத் தலா ரூ.5,000 வீதம் அரசின் ஒதுக்கீட்டின்படி 295 பெண்களுக்கு ரூ.14.75 இலட்சம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், ரூபாய் 200 வீதம் 6,255 பெண்களுக்கு ரூபாய் 12.51 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.விதவையின்மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் /45 பெண்களுக்கு ரூபாய் 90 ஆயிரமும், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் மூலம் 6 பெண்களுக்கு ரூ.30 ஆயிரமும், தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ்,9தம்பதியருக்கு ரூ.44,300ம் வழங்கப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத் தின் கீழ், 2 பெண்களுக்கு ரூபாய் 2,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளன. விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 170 குழந்தை களுக்கு ரூ.13,900 வழங்கப்பட்டுள்ளது. 13 பேருக்கு உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000 வீதம் ரூ.13 ஆயிரமும், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 413 பேருக்கு ரூபாய் 19 ஆயிரமும், கடும் உடல் ஊனமுற்ற வர்களுக்குப் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 20 பேருக்கு ரூபாய் 32,500 மார்ச்சு 1992 முடிய வழங்கப்பட்டுள்ளது.

**ஆபரேசன்-போலியோ சிறப்புத் திட்டம்**

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்ற நபர்களுக்கு முழுமையான அளவில் மருத்து வப் பொருளாதாரக் கல்வி மற்றும் சமூக மறுவாழ்வு உதவிகள் அளிப்பதே இத்திட்டம். ஆண்டிற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு உடல் ஊனமுற்றவர்கள் பற்றிய கணக்கெடுப்புச் செய்து அதன் அடிப்படையில் மருத்துவக் குழுவின் மூலம் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் தேர்வு முகாம்களில் தேர்வு செய்யப்படுவார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு உதவித் தொகை ரூ.400 உடன் இலவச அறுவைச் சிகிச்சை முடநீக்கியல் சாதனம், ஊன்று கோல்கள், மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், கல்வி உபகாரச் சம்பளம், கடன் உதவி, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகைபோன்ற மறுவாழ்வு உதவிகள் மாவட்டச் சமூக நல அலுவலகத்தின் மூலமாக வழங்கப்பட்டு வரு கின்றன.

1989-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளில் மானாமதுரை, திருப்பத்தூர், காளையார்கோவில், இளையாங்குடி, சிங்கம்புணரி, சாக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல் படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள விவரப்படி இளம் பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

| ஆண்டு | திட்டம் செயல்படுத்தப் பட்ட ஊராட்சி ஒன்றியம் | | பயன்பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. முதற் கட்டம் 1989-90 | 1. | மானாமதுரை | 226 |
| | 2. | திருப்பத்தூர் | 242 |
| | | மொத்தம் | 468 |
| 2. இரண்டாம் கட்டம் 1990-92 | 1. | இளையான்குடி | 273 |
| | 2. | காளையார்கோவில் | 183 |
| | 3. | சிங்கம்புணரி | 223 |
| | | மொத்தம் | 679 |
| 3. மூன்றாம் கட்டம் 1991-92 | 1. | சாக்கோட்டை | 162 |
| | | மொத்தம் | 162 |

**இலவசச் சீருடை வழங்கும் திட்டம்**

சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் சிறப்புத் திட்டத்தில் மகளிர் மேம்பாட்டிற்கெனக் கீழ்க்காணும் உதவிகள் 1991-92-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு உள்ளன. தையல் கூட்டுறவு மகளிர் மேம்பாட்டுச் சங்கங்கள் மூலம் தமிழக அரசின் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், சீருடை தையல்பணி வழங் கியதன் மூலம் 525 மகளிர்க்கு வேலைவாய்ப்பு உரு வாக்கப்பட்டு உறுப்பினர் ஒருவர் சராசரி கூலியாக ரூ.1,800 வரை பெற்றுள்ளனர்.

காலணி உற்பத்தி மகளிர் மேம்பாட்டுச் சங்கங்கள் மூலம் 100 ஆதிதிராவிடர் மகளிர்க்கு 30,768 இணை காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டது. உறுப்பினர் ஒவ்வொருவரும் சராசரியாக ரூ.1,230 கூலி பெற்று உள்ளனர். சாக்குக் கட்டி உற்பத்தி மகளிர் மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி முறையே 50 மற்றும் 25 மகளிர்க்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கம்பளிப் பயிற்சி மையத்தின் மூலம் 20 நபர்களுக்குக் கம்பளித் தயாரிப்புத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**குழந்தைகள் பராமரிப்பு இல்லம்**

மானாமதுரையில் இயங்கும் அரசு குழந்தைகள் இல்லத்தில் 250 குழந்தைகளுக்கு 230 குழந்தைகள் சேர்க்கப்பட்டுக் கல்வி பயின்று வருகிறார்கள்.

அரசு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.6,74,300-இல் 230 குழந்தைகள் 1991-92-ஆம் ஆண்டில் சேர்க்கப் பட்டு ரூபாய் 6,59,710 செலவு செய்யப்பட்டுள்ளது.

- ந. பாலையா
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை.




# பக்கிங்காம் கர்நாட்டிக் பஞ்சாலை மீண்டும் திறப்பு

கடந்த ஓராண்டுக் காலமாக மூடிக்கிடந்த பக்கிங்காம் கர்நாட்டிக்ஆலை (பின்னி ஆலை) சென்னையில் தமிழ்ப் புத்தாண்டு தினமான 13.4.1992 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை பெரம்பூரிலுள்ள இந்த ஆலையின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பின்னி ஆலையை மீண்டும் திறந்து வைத்தார்.

விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்திய பின்னி ஆலையின் செயல்தலைவர் திரு எத்திராஜன் அவர்கள், ஆலை நிர்வாகத்தினரையும் தொழிலாளர்களையும் இரு கண்களாகப் பாவித்து, இருதரப்பினரையும் அழைத்துப் பேசி, பிரச்சினையைத் தீர்த்து வைத்து, தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் ஆலையைத் திறக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

பின்னர், பின்னி ஆலையின் சார்பாகவும், தொழிற் சங்கங்களின் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு தா. பாண்டியன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், 'கடந்த ஓராண்டுக்கு மேல் மூடப்பட்டுக் கிடந்த இந்த ஆலையின் சுமார் 8 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்கள், தமிழ்ப் புத்தாண்டில் புது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள்' என்று கூறினார்.

பின்னி ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திரு உ.ரா. வரதராசன் அவர்கள் பேசுகையில், 'தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதல்வர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறார்கள். இதற்கு மைய அரசின் ஒத்துழைப்பும் வேண்டும். முதல்வர் அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்குத் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்புத் தருவார்கள்' என்று கூறினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், "ஆலை மூடப்பட்டு சுமார் 12 மாதங்களுக்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மற்றும் ஆர்வத்தின் காரணமாக இன்று 8 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களில் வாழ்வு மலர்ந்திருக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நமது முதல்வர் யாருக்கும் சளைத்தவரல்ல. எந்தத் தொழிலாளிக்கும் பாதிப்பு இல்லாமல், ஆலையைத் திறக்க முதல்வர் அவர்கள் பாடுபட்டார். கூடிய விரைவில் பின்னி ஆலை நவீன ஆலை என்ற பெயரெடுக்கப் பாடுபட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், 'தொழிலாளர்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர் நமது முதல்வர் அவர்கள். எந்தத் தொழிலாளியும், பாதிக்கப்படாமல் தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம் தந்தவர் முதல்வர்' என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலையின் இயந்திரத்தை இயக்கிவைத்து, ஆலையைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

"பழம்பெரும் பக்கிங்காம் கர்நாடிக் பஞ்சாலை, இன்று மீண்டும் திறக்கப்படும் இந் நன்நாளில், நானும் உங்களுடன் இருக்கின்றேன் என்பதை எண்ணிப்பெருமகிழ்ச்சி அடைகின்றேன். என்னுடைய இந்த மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?

கடந்த 115 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டு, வளர்ந்து, 88,208 கதிர்களையும், 2,074 தறிகளையும் தன்னகத்தே கொண்டு, இயங்கி வந்த இந்த மாபெரும் ஆலையில் ஏற்பட்ட பிரச்சினைகளை, நான் தலையிட்டுத் தீர்த்து வைத்தது தான் என் மகிழ்ச்சிக்குக் காரணம் என்றும், அதனால் மீண்டும் இன்று அது திறக்கப்படுவதை எண்ணித் தான் பெருமிதம் கொள்கிறேன் என்றும், யாரேனும் ஊகித்தால், அது சரியல்ல. ஏனெனில், கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேல் மூடிக் கிடந்த ஆலையின் தொழிலாளர்கள், ஏறத்தாழ 8,000 தொழிலாள உடன்பிறப்புகளின் இல்லங்களில், இன்று முதல் விளக்கெரியப் பேகின்றதை நினைத்துத் தான், உவகை கொண்டேன். இன்று மீண்டும் ஏற்றப்படும் அந்தத் திருவிளக்குகள், என்றும் அணையாது, தனது இருகரம் கொண்டு இந்த அரசு காக்கும் என்பதை, இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு தொழிற்சாலை மூடப்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். என்னைப் பொறுத்தமட்டில், இந்த ஆலை மூடப்பட்டிருப்பது தெரியவந்த உடன், என் கண் முன் தோன்றியது, அதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட 8,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் தான். மாதந்தோறும் ஊதியம் பெற்று, அதனையே நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த, ஆயிரக்கணக்கான தொழிலாள உடன் பிறப்புக்களின் குடும்பங்கள், நிலை குலைந்து தடுமாறி, தாங்கொணாத்துயரம் அடைகின்றனரே என்ற எண்ணம் தான்.

நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே, பலவேறு பிரச்சினைகள் இருக்கலாம். அவை ஒரு சாராரின் நியாயமான கோரிக்கைகளாகக் கூட இருக்கலாம். ஆனால், அந்தக் கோரிக்கைகளை நிதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளாமல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதோ, அல்லது கதவடைப்பில் முடிவாவதோ, என்னால் என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும்.

ஆலை நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளினால், உண்மையாகப் பாதிக்கப்படுபவர்கள், பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் குடும்பத்தினரே.

கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேற்பட்ட இந்த ஆலையின் கருப்பு நாட்களில், எத்தனைத் துயரங்களையும், வேதனைகளையும், அன்புத் தாய்மார்களும், அவர்தம் குழந்தைகளும் அனுபவித்தனர் என்பதை எண்ணிப் பார்த்தால், என் கண்கள் கலங்குகின்றன.

தனியார் துறை ஆலையின் பிரச்சினைதானே இது, அரசு ஏன் இதில் தலையிட வேண்டும், என்ற ஐயப்பாடு கூட, ஒரு சிலருக்கு ஏற்படலாம். நான் ஒன்றை இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது தனியார் பிரச்சினை அல்ல. பல்லாயிரக்கணக்கான இந்த ஆலைத் தொழிலாளர்களின் இல்லப் பிரச்சினை. தவறு ஏதும் செய்யாத அவர்களின் குடும்பத்தினர், தண்டிக்கப்படும் வாழ்க்கைப் பிரச்சினை.

எனவேதான், நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல், இந்த ஆலையின் பிரச்சினைக்கு, சுமூகமான ஒரு தீர்வு காணவேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டேன்.

ஒரு காலக்கட்டத்தில், ஆலையின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், உணவுப் பொருட்களை விநியோகம் செய்யக்கூட, போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தால், உணவுப் பொருட்களை வழங்குவதை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுது, ஏறத்தாழ 9 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கான உணவுப் பொருட்களையும், இதர பண்டங்களையும், Tamil Nadu Civil Supplies Corporation-இல் இருந்து, கடனாக வழங்க ஆணையிட்டேன்.

ஏனென்றால் மூடிக்கிடந்த இந்த ஆலையின் தொழிலாளர்களின் குடும்பங்கள், பசியினால் வாடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான்.

மேலும் சென்ற ஆண்டு, தீபாவளித் திருநாளை எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்களே, ஆனால், தமிழகத்தில் மூடிக்கிடக்கும் ஆலைத் தொழிலாளர்களின் குடும்பத்தினர், அதனைத் துக்க நாளாகக் கொண்டாடும் நிலை ஏற்பட்டுவிட்டதே, என்ற ஆதங்கத்தில் தான்,

### திருப்பூரில் ஏற்றுமதி மையம்

பின்னலாடை தொழிலுக்கு சிறப்புப் பெற்ற திருப்பூரில் ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத் தின்கீழ், திருப்பூர் நகருக்குத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, மின் விளக்கு, கழிவுநீர் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படும். இந்தப் பணி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப் படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏதாவது ஒரு சிறு உதவியாவது செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து, 400 ரூபாய் வீதம், இந்த ஆலையின் 8,136 தொழிலாளர்களுக்கும், உரிய நேரத்தில் உதவித் தொகை வழங்க ஆணையிட்டேன்.

இந்த ஆலையின் பிரச்சினை ஒரு சுமூகமான முடிவுற்கு வராமல், வளர்ந்துகொண்டே சென்றதால், ஆலையின் நிர்வாகத்தையும், அனைத்துத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளையும், கடந்த 4.2.1992 அன்று நேரில் அழைத்து, கலந்துரையாடி, இன்று இந்த ஆலையை மீண்டும் திறக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். அன்றைய தினம் நான் விடுத்த அன்புக் கட்டளையை ஏற்று, ஆலை நிர்வாகத்தினரும், தொழிற் சங்க நிர்வாகிகளும், தொழிலாளர்களும், நான் குறிப்பிட்ட நாளிலேயே ஆலையை மீண்டும் திறப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு, நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

வரவேற்புரை ஆற்றிய திரு எத்திராஜ் அவர்கள், இனிமையாக இத் தொடக்கத்தை அமைக்கும் முகத்தான், ஒவ்வொரு தொழிலாளருக்கும் இனிப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து மேலும் சில இனிப்புச் செய்திகளை, இங்கு நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கொடுத்துள்ள கடன் தொகையான 9 இலட்சம் ரூபாயை, தொழிலாளர்களிடமிருந்து 9 தவணைகளில் பிடித்தம் செய்துகொள்ள வேண்டும், என்ற உங்களின் கோரிக்கை, எனது கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. ஓராண்டிற்கு மேல் அல்லல்பட்ட நீங்கள், ஊதியம் பெறாத காலத்தில், வாழ்க்கைக்கு வழி இல்லை என்ற நிலையில், கடனாக வழங்கப்பட்ட இந்த 9 இலட்சம் ரூபாயையும், மனிதாபிமான அடிப்படையில், பிடித்தம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்துள்ளேன். எனவே நீங்கள் அந்தக் குறிப்பிட்ட கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகத்தினரும் அதனைப் பிடித்தம் செய்ய மாட்டார்கள். உங்களது இந்தக் கடனை, அரசே ஏற்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உங்களது B & C Mills Employees Co-operative Society-யின், சென்ற ஆண்டுக் கடனின் வட்டித் தொகையைத், தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் உள்ளதாக, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது குறித்த மட்டில், வங்கிக் கடனைத் திரும்பச் செலுத்தினால் தான் மீண்டும் கடன் பெற முடியும். எனவே, சென்ற ஆண்டின் வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்வதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், உங்கள் கூட்டுறவுச் சங்கம்

• நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். நமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பந்தான் கண்ணியமான குடும்பம்.

— தந்தை பெரியார்

தொடர்ந்து இயங்குவதற்கு உதவும் வகையில், இந்த ஆண்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகையை ஒத்தி வைத்து, தவணைகளில் அதை செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலையின் நிர்வாகத்தினர், சில புதிய திட்டங்களையும் இங்கே அறிவிக்குமாறு, என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அதன்படி, இனி ஒவ்வொரு ஆண்டும், 25 ஆண்டுச்காலப் பணியினை முடித்த ஒவ்வொரு தொழிலாளருக்கும், ஒரு கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும்.

இந்த ஆண்டு முதல், பணியில் உள்ள தொழிலாளர் எவரேனும் அகால மரணமடைந்தால், மனிதாபிமான அடிப்படையில், அவரது வாரிசுதாரர் ஒருவருக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆலையிலேயே வேலை கொடுக்கப்படும்.

இந்த ஆண்டு முதல், தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பள்ளிக் கட்டணத்தை, ஆலையின் நிர்வாகமே செலுத்தும். அவர்களுக்குத் தேவையான பள்ளிச் சீருடைகளையும் நிர்வாகமே இலவசமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவிலேயே, நான் ஏற்கெனவே கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வழங்கப்படும் ஒரு மாத ஊதியத்துடன், சென்ற ஆண்டிற்கான போனஸ் தொகையும் சேர்த்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இன்று இரண்டு மாத ஊதியம் வழங்கப்படும், என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

இத்தனை மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கும் தொழிலாளர் குடும்பங்கள், அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும் பெற்று, வாழ்க்கையில் உயர வேண்டும், என்ற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆலையினை மீண்டும் திறந்தது குறித்து, ஒரு சிலர், அரசு இறங்கி வந்தது, போராட்டம் வெற்றி கண்டது, என்பது போன்ற வக்கிரமான சுயநலக் கருத்துக்களைத் தெரிவித்தாலும், இந்த

அரசின் உண்மையான முயற்சிகள், உலகம் அறிந்தது. அதைவிட நீங்கள் ஒவ்வொருவரும் மிகவும் நன்றாகவே உணர்ந்திருக்கின்றீர்கள். எனவே, அதுபற்றி நான் ஏதும் குறிப்பிட விரும்ப வில்லை. உரிமைக்காகப் போராடுங்கள். ஆனால், உங்களது குடும்பத்தினரின் வாழ்க்கையை இருட் டாக்காதீர்கள். அவர்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைச், சிறிது சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் உங்களது கடமைகளை உணர்ந்து செயல்பட்டால், கடந்த ஓராண்டுக் காலத்தில் ஏற்பட்ட அவல நிலை போன்று, இனி என்றென்றும் நிகழாது.

இந்தத் தருணத்தில், தமிழகத்திலுள்ள அனைத்து நிர்வாகத்தினரையும், தொழிற் சங்க உடன்பிறப் புக்களையும் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எக்காரணத்தைக் கொண்டும் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற அழிவுச் செயல்களில் ஈடுபடாதீர்கள்.

எத்தகைய பிரச்சினையாக இருப்பினும், அதனை அமைதியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளினால் 'தான், ஓராண்டிற்குமேல் மூடிக்கிடந்த இந்த ஆலை இன்று மீண்டும் திறக்கப் பட்டுள்ளது. உரிமைகளையும் கடமைகளையும் சரி யாகச் சீர் தூக்கிப் பார்த்தால், உங்களின் வீடுகள் நலம் பெறும், அதனால் நாடும் நலம் பெறும் என் பதைத் தெரிவித்து, இந்த இனிய விழாவில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொண்டு, உங்கள் வாழ்க்கை ஒளிமயமாக அமைய வேண் டும், உயரவேண்டும் என வாழ்த்துகிறேன்."

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை நிகழ்த் திய பின், பின்னி ஆலைத் தொழிலாளர்களுக்கு இனிப்புடன் கூடிய டிபன் கேரியர்களையும், 25 ஆண்டுகள் பணி முடித்த தொழிலாளர்களுக்குக் கைகடிகாரங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.

பின்னி ஆலையை மீண்டும் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, வெள்ளி யாலான ஆலையின் சின்னத்தை ஆலையின் நிர் வாகிகள் நினைவுப் பரிசாக வழங்கினார்கள்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக் களும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் களும் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் இயக்குநர் திரு. எஸ். நடராஜன் அவர்கள் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: ஜேசி.

## தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ), ரூபாய் 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 21.3.1983-இல் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. 31.3.1991-ஆம் நாளன்று உள்ளபடி இந்நிறுவனத்தின் அரசின் மூலதனப் பங்கு ரூ.2.50 கோடியாகும். இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன:-

- தமிழ்நாட்டில் தோல் தொழிலை வளர்ச்சி யடையச் செய்தல்.
- தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர் களுக்கு உதவியளித்தல்;
- சிறிய தோல் பதனீட்டாளர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்;
- தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்.

இந்நிறுவனத்தின் 1990-91-ஆம் ஆய்வு ஆண்டின் மொத்த விற்பனை அளவு ரூ.742.30 இலட்சமாகும். கடந்த ஆண்டு 1989-90-இல் இதன் அளவு ரூ.931.13 இலட்சமாகும்.

இவ்வாண்டில், இந்நிறுவனம் காலணி மற்றும் தோல் பொருட்கள் குறித்த 7 பொருட்காட்சி களில் கலந்து கொண்டுள்ளது. இத்தகைய பொருட் காட்சிகளின் மூலமும் விற்பனை நிலையங்களின் மூலமும் நடைபெற்ற விற்பனையில் ஈட்டிய ஆதாயம் முறையே ரூ.54.74 இலட்சம், ரூ.6.77 இலட்சம் ஆகும். பொருட்கள் வங்கிகள் மூலம் செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விற்பனைத் தொகையும் அதன் மூலம் கிடைத்த ஆதாயத் தொகையும் முறையே ரூ.45.80 இலட்சமும், ரூ.5.92 இலட்சமும் ஆகும்.

இலவசக் காலணி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.437.25 இலட்சம் செலவில் ரூ.6.50 இலட்சம் இணை காலணிகளை வழங்கும் பணி இந்நிறு வனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 31.3.1991 வரையான காலத்தில் ரூ.116.49 இலட்சம் மதிப்புள்ள 7.06 இலட்சம் இணை காலணிகளை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் இந் நிறுவனம், 2,500 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதி அளித்துள்ளது.

# தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலங்களேயாகும்!

## இந்து சமய அறநிலையத்துறை விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை

உலக அளவில் இன்றைக்கு இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்ப்பனவற்றுள் முதன்மையானது இந்தியாவின் ஆம்மீகச் சிறப்பு. சமய நெறி முறைகள் பலவும் தழைத்தோங்கி, அவற்றைச் சார்ந்த அறம் கூறும் நல்லோர் பலர், இறையுணர்வுக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி வழி பாட்டுத் தலங்களைப் படைத்து, நமது பண்பாட்டினைச் செம்மையாக்கிய பாங்கினை, நமது நாட்டின் பிற பகுதிகளைக் காட்டிலும் தமிழகத்தில் நாம் நன்கு காணலாம்.

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் ஒவ்வொன்றும், பழமைக்கும் புதுமைக்கும் உள்ள இணைப்புப் பாலங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் நமது திருக்கோயில்களின் வரலாற்றுப் பின்னணி, அவற்றின் ஆன்மீகச் செறிவு, அவை வெளிப்படுத்தும் கலையழகு ஆகியவை நமக்குப் பழமையின் சாதனையை எடுத்துரைக்கும் கலாச் சாரக் கருவூலங்கள். அதே நேரத்தில், அந்தத் திருக்கோயில்களில் புதைந்துள்ள அரிய கலைச் செல்வங்கள், இன்றைக்கும் நாம் கற்றுணர வேண்டிய பல்வேறு உண்மைகளையும் மாபெரும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள கலைப் பொக்கிஷங்கள். சிற்பம், ஓவியம், இசை, மற்றும் தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும், காலத்தின் மாற்றத்தினால் எழுந்துள்ள புதிய சிந்தனைகளுக்கும்கூட விளக்கம் தருபவைகளாக அவை அமைந்துள்ளன. எனவே, நமது திருக் கோயில்களைப் 'புதுமையின் உறைவிடம்' என்று கூறுவது சாலப்பொருந்தும்.

எங்கள் அரசு கோவில் நிர்வாக வாரியம் (Temple Administration Board) என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் எத்தகைய சீரிய முறையில் தமிழகத் திருக்கோயில்களைப் பராமரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பது இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், அரசின் தலையீடு திருக்கோயில்களின் நிர்வாகத்தில் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும் என்ற ஒரு வாதம் இன்றைக்கும் கூறப் பட்டு வருவதையும் நான் அறிவேன்.

அரசு என்பது நிர்வாகத்தை நடத்துகின்ற ஒரு வெற்று இயந்திரம் அல்ல. எங்களைப் பொறுத்த வரையில் ஆறு கோடித் தமிழக மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும்,



இலட்சியங்களையும் கண்டறிந்து, அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற ஒரு மக்களாட்சி அமைப்புதான் அரசாங்கம். எனவேதான், ஒரு குறிப்பிட்ட சாராரின் எதிர்ப்புகளைப் பொருட் படுத்தாமல், சவால்களைச் சந்தித்து, மக்களாட் சிக்கு மாட்சிமை சேர்க்கவேண்டும் என்ற எங் களின் நல் உணர்வுகளின் வெளிப்பாடுதான் எங்கள் அரசின் செயல்பாடு. திருக்கோயில்களை யும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளை நிறுவனங் களையும் பராமரிப்பதில் சிலர் நினைப்பது போன்று, தேவையற்ற நிர்வாகத் தலையீடுகள் இருக்காது. ஆனால், அதேநேரத்தில் இந்த அரசு ஆக்கபூர்வமான விஷயங்களில் தலையிட்டு, தனது சீரிய பங்கினைச் செயலாற்ற என்றைக்கும் தயங்காது.

தமிழகத்தின் தனிச் சிறப்பான ஆலயங்களின் புனிதம் காக்கப்படும்; மரபுகள் கெடாத வகையில் இந்தியக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் நாள் முதல் செயல்படுகின்ற வகையில், தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம் அமைக்கப் பட்டது. இந்த வாரியத்தில் சைவ, வைணவத் திரு மடங்களின் மடாதிபதிகள், சமயச் சான்றோர்கள், ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் சட்ட வல்லு நர்கள், கோவில் நிர்வாகத்தில் ஆர்வமும் அக் கறையும் கொண்ட சான்றோர்கள் உறுப்பினர் களாக உள்ளனர். இவ்வாறு உயர்ந்த பெருமக்கள் பங்கு கொண்டிருப்பதன் மூலம், தமிழகம் முழு வதுமுள்ள ஆலயங்கள், மற்றும் அறநிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் பணி, சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆலய நிர்வாகத்தில், மாநில அளவில், தமிழ்நாடு மாநில ஆலய நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்களும் உள்ள

# ஏறத்தாழ 400 கோயில்களுக்கு மூலதன வைப்புநிதி ஏற்படுத்த முடிவு!

கோயில் நிர்வாகங்கள் சீரமைக்கப்படும். பக்தர்கள் மனதைப் புண்படுத்தும் வகையிலான எக்காரிய மும் தமிழகத்தில் அனுமதிக்கப்பட மாட்டாது என்று, எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே கூறியிருந்தோம். மேலும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில் களைத் தவிர, தமிழகக் கிராமங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான சிறுசிறு புராதனக் கோயில்கள், பராமரிப்பு இன்றிப் பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலையில், அவைகளை நன்கு பரா மரித்து, அவற்றின் அன்றாடப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்திருந் தோம். அந்த அறிவிப்புக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில், 'தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம்' என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனிடம் ஆலயங்களின் நிர்வாகத்தை ஒப்படைக்கத் தேவையான சட்டத் திருத்தங்கள் கொண்டுவருவோம் என்று, சென்ற மானியக் கோரிக்கையின்போது நான் தெரிவித்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, அவை இரட்டை அடுக்கு அமைப்பு உருவாக்கப்பட்டுள் ளது. ஆலயத்தின் ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சமும், அதற்கு மேலும் உள்ள ஆலயங்களின் அறங்காவலர் குழுவை, மாநில அளவில் அமைக் கப்பட்டிருக்கின்ற ஆலய நிர்வாக வாரியம் அமைக்கும்.

அதேபோன்று, மாவட்ட அளவிலே, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழே உள்ள ஆலயங்களுக்கு, அறங்காவலர்களை நியமிக்கும் பொறுப்பு, மாவட்டக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டு உள்ளது. அண்மையில் மாநில அளவிலான ஆலய நிர்வாக வாரியத்தின் முதல் கூட்டம் கூட்டப்பட்டு, ஆலயத் திருப்பணிகள், உற்சவத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு, திருமண மண்டபங்கள் மற்றும் அங்காடி வளாகங்கள் கட்டுதல் போன்ற பொருட்கள், அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு, திருப்பணிகளுக்கு ரூ.3.19 கோடி அளவிற் கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள் ளது. மேலும், மாநிலம் முழுவதும் 17 மாவட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(33—ஆம் பக்கம் பார்க்க)




# கபாலீசுவரர் கோயில் திருக்குளச் சீரமைப்பு

சென்னை-மயிலாப்பூரில் நடைபெற்ற அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளச் சீரமைப்புத் துவக்கவிழா *13.4.1992* அன்று சிறப்புடன் நடைபெற்றது.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை-தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தின் சார்பில் நடத்தப் பெற்ற இவ்விழாவில், அவ்வாரியத்தின் தலைவரும், மாண்புமிகு தமிழக முதல்வருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுத் திருக்குளச் சீரமைப்புப் பணியைத் துவக்கிவைத்தார்.

விழாவுக்கு வருகைதந்த அவரை மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், டில்லியில் உள்ள மாண்புமிகு தமிழக அரசு சிறப்புப் பிரதிநிதி திரு. தம்பித்துரை, மாண்புமிகு துணைச் சபாநாயகர் திரு. பொன்னுசாமி, மாண்புமிகு அரசு கொறடா, திரு. கா.ப. பட்டாபிராமன், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் மயிலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன், டாக்டர் ஸ்ரீதரன் எம்.பி. ஆகியோரும் வரவேற்றுத் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பூச்செண்டுகள் வழங்கியும் பொன்னாடை அளித்தும் தெரிவித்துக் கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை, வேத மந்திரங்களும், நாதசுரமும் முழங்கப் பூரணகும்ப மரியாதையுடன் விழாக் குழுவினர் வரவேற்றார்கள். அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கப் பட்டது.



அறநிலையத்துறைச் செயலாளர் திரு. சி. தங்கராசு அவர்கள் தம்முடைய வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''இக்கோயில் திருக்குளத்தில் 1987-ஆம் ஆண்டு தெப்பத் திருவிழா நடைபெற்றது; அதற்குப் பிறகு தண்ணீர் இல்லாததால் தெப்பத் திருவிழா நடைபெறவில்லை.

''2.3.1992-இல் நடைபெற்ற திருக்கோயில் களின் நிர்வாக வாரியக் கூட்டத்தில் மயிலாப்பூர் கோயில் திருக்குளத்தின் சீரமைப்புப்பற்றி ஆராயப் பட்டது. ஒரு கோடி ரூபாய் செலவில் குளச் சீரமைப்புப் பணி செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கூட்டத்தில் முடிவு செய்து 35 இலட்சம் ரூபாயை முதல்கட்டமாக ஒதுக்கினார்; குளத்தில் இரண்டடி உயரத்திற்குக் களிமண் போடப்படும்; அதன் பிறகு அதற்கு மேல் அரை அடி உயரத்திற்குக் குறுமணல் போடப்பட்டுத் தண்ணீர் தேக்கிவைக்கப்படும். இந்தத் தண்ணீர் எப்போதும் சுத்தமாக வைத்திருக்கப்படும். எப் போதும் போல அடுத்த தை மாதம் பௌர்ணமி நாளன்று இங்கே மிகச் சிறப்பாகத் தெப்போற சவம் நடைபெறும்'' -இவ்வாறு செயலாளர் பேசினார்.

இதையடுத்து மங்கள இசை முழங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்துத் திருப்பணி துவக்கம் குறித்த கல்வெட் டைத் திறந்துவைத்தார்.

பெயர்ப் பலகைக்கு முன்னால் வெள்ளிமயில் மின்ன-வெள்ளியால் ஆன சிவலிங்கமாகக் கபாலீசுவரர் விக்கிரகம் அலங்கரிக்கப்பட்டிருந் தது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரங்கூப்பி வணங்கிவிட்டு அங்கிருந்து மகிழ்வுடன் விடை பெற்றார்.

விழாக் கோலம் பூண்டிருந்த மயிலாப்பூரில் - இந் நிகழ்ச்சியை ஏராளமாகத் திரண்டிருந்த மக்கள் கண்டுகளித்து மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தி வாழ்த்தொலி முழக்கினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
இல. இராசேந்திரன்.

## திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் திட்டப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில், வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.11 இலட்சம் செலவில் நிலம் கையகப்படுத்தப் பட்டு 2 ஆயிரம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ரூ.14 ஆயிரம் மதிப்பில் 20 நபர்களுக்குச் சலவைத் தொழில் செய்ய உதவி செய்தலின் பொருட்டு, சலவைப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. 11 நபர்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்குத் தலா ரூ.1,500 வீதம் ரூ.16,500 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தூய்மையாகப் பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ், 6 ஆதிதிராவிடர் கிராமங்களுக்குத் தலா ரூபாய் ஒரு ஆயிரம் வீதம் ரூ.6 ஆயிரம் செலவில் வானொலிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

இலவசக் காலணிப் பணிக்கூடம் வழங்கும் திட்டத்தின்கீழ், 1991- 92-ஆம் ஆண்டில் 9 நபர்களுக்கு 99 ஆயிரம் மதிப்பில் இலவசக் காலணிப் பணிக்கூடம் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகளுக்குப் பாசனக் கிணறுகள் இலவசமாக வெட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், 21 கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

7 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்பு களுக்குச் சாலை வசதி, மயானச் சாலைக்குப் பாதை வசதி, தெரு விளக்கு போன்ற வசதிக்கு ரூ.1.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்



## நம்மோடு நமக்காக

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டி விட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.

''கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே''

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட் போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது. எனவேதான், நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்துவிட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். `அவர் வாழ்க. அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றி யினால் நமக்கு வெற்றி ஓங்குக' என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறு கிறது.

—பேரறிஞர் அண்ணா.



## இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்

# மகளிர் காவல் நிலையம்

**சென்னை** மாநகரில் - முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 13.4.1992 அன்று கிரீம்சு சாலையில் தொடங்கிவைத்தார்.

காவல் துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால் அவர்கள் மலர்ச் செண்டு கொடுத்தும் - அக் காவல் நிலையம் அமைந்துள்ள ஆயிரம் விளக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு சட்ட அமைச்சருமான திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பொன்னாடை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார்கள்.

குதிரைப் படை அணிவகுத்து நிற்க, விழா மேடைக்கு வருமுன் பெண் காவலர்கள் மாண்புமிகு முதல்வருக்கு அணிவகுப்பு மரியாதை அளித்தார்கள்.

பெண் காவலர்கள் புதிய நிலையத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்து - பார்வையாளர் சிறப்பேட்டில் குறிப்பெழுதி முதல் கையெழுத்திட்டார்; கட்டடத்தைச் சுற்றிப் பார்த்தார்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் முதலான, சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலரும் வருகை தந்திருந்தார்கள். அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளும், காவல்துறை உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

**வரவேற்புரை:**

காவல்துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் ஒளிமயமான எதிர்காலம் அமையப் பாடுபட்டு வருகிறார். இந்த இனிய தமிழ்ப் புத்தாண்டு நாளில், இங்கே மகளிர் காவல் நிலையம் அவர்களது திருக்கரங்களால் திறந்து வைக்கப்படுவது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி தருவதாகும்.

'வேண்டப்பட்டது அறிவோ இனி, வேண்டப்பட்டது திருவோ இனி' என்ற மணிவாசகப் பெருமானின் திருவாசகப்படி - காவல் துறையினராகிய நாம் கேட்காமலே இந்தப் பத்துமாத காலத்தில் பல்வேறு உதவிகளையும் சலுகைகளையும் நமக்களித்துள்ள அவர்களுக்கு, மனநிறைவைத் தரும் வகையில் நாம் பணியாற்றுவோம் என்று இந்நாளில் உறுதிகூறிச் செயல்படுவோம்''

- இதன்பின், 'டாக்டர் புரட்சித் தலைவி வாழ்க' என்ற பொதுமக்களின் வாழ்த்து முழக்கங்கள் தொடர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

# பெண் காவல் நிலையப் பணிகள்

சென்னை நகரக் காவல்துறையில், 1973-ஆம் ஆண்டு முதன்முதலாகப் பெண் காவல் பிரிவு தொடங்கப்பட்டது; இந்தப் பிரிவு தமிழ்நாட்டிலேயே முதன்முதலாகத் தொடங்கப்பட்டதாகும். இந்தப் பிரிவில் ஒரு பெண் உதவி ஆய்வாளர், ஒரு பெண் தலைமைக் காவலர் மற்றும் 20 பெண் காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

இந்தப் பிரிவு படிப்படையாகப் பலப்படுத்தப்பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன், ஒரு ஆய்வாளர், 3 உதவி ஆய்வாளர், 6 தலைமைக் காவலர் மற்றும் 24 பெண் காவலர்களைக் கொண்ட 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' தொடங்க முடிவு எடுக்கப்பட்டது. சென்னை நகரில் பெண் காவலர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு ஆய்வாளர், 12 உதவி ஆய்வாளர், 26 பெண் தலைமைக் காவலர் மற்றும் 140 பெண் காவலர்கள் (மொத்தம் 179) கொண்டதாக உள்ளது.

இந்தத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தொடங்கப்படுகின்ற 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' சென்னை நகர் முழுவதும் அதிகார வரம்பைக் கொண்டது. பெண்கள், வரதட்சிணைக் கொடுமை, அநீதி இழைப்பு இன்னபிற புகார் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் பகுதி எல்லைக்கு உட்பட்ட காவல் நிலயத்தில் புகார் கொடுக்கலாம்; அப்படி அவர்களுக்கு அங்கே புகார் கொடுக்கத் தயக்கமாக இருந்தால், சென்னை நகரம் முழுவதும் அதிகார வரம்பு உள்ள இந்த 'அனைத்துப் பெண் காவல் நிலையத்'திற்கு வந்து புகார் கொடுக்கலாம். இந்த 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' பெண் புகார்தாரர்களின் குறைகளைப் போக்க ஏதுவாக இருக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

அனைத்துப் பெண் காவல் நிலையத்தின் பணிகள் விவரம் வருமாறு:-

1. பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல், வன்முறை, காயப்படுத்துதல் போன்ற குற்ற வழக்குகளில் தக்க நடவடிக்கை எடுத்தல்.

2. பெண்களுக்கு எதிராக நடைபெறும் வரதட்சிணைக் கொடுமை வழக்குகளை விசாரித்தல்.

3. பாதிக்கப்பட்ட இளங்குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட புகார்களை விசாரணை செய்தல்.

4. இளங்குற்றவாளிகள் மற்றும் பெண் குற்றவாளிகளைப் பரிசோதித்து விசாரணை செய்தல்.

5. இளங்குற்றவாளிகள் மற்றும் பெண் கைதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்து அழைத்துச் செல்லுதல்.

6. பெண்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பாதுகாப்புப் பணி செய்தல்.

7. பெண்களைச் சோதனை செய்தல் மற்றும் கோவில், பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பெண்களுக்கு உதவியாக இருத்தல்.

8. விபச்சார ஒழிப்புப் பிரிவுச் சட்டத்தை அமல் செய்வதில் விபச்சார ஒழிப்புப் பிரிவினருக்கு உதவியாக இருத்தல்.

9. பெண் சாட்சிகளை விசாரிப்பதில், விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு உதவியாக இருத்தல்.

---

அவர்கள் பேச்சு முழுவிவரம் வருமாறு:

''காவல் துறையின் சரித்திரத்திலேயே இன்று ஒரு புரட்சிகரமான நாள். உலகில் எங்குமே பொதுவாக மகளிருக்குத்தான் காவல் தேவை என்று இருந்த நிலை மாறி, மகளிரே காவலர்களாகி, இன்று தனியே இயங்கும் மகளிர் காவல் நிலையம் தொடங்கப்படுகின்றது என்ற பரிணாம வளர்ச்சியைக் காணும் பொழுது, எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அனைவரும் - பெண்களைப் பேணிக்காக்க வேண்டும், அவர்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகர் சம உரிமை பெற வேண்டுமென்று போராடிய சத்திய சீலர்கள்.

அவர்கள் வழி நடக்கும் எங்கள் அரசின் காலத்தில்தான், அகில இந்தியாவிலேயே முதன்முறையாக, முற்றிலும் மகளிரே பணிபுரியும் காவல் நிலையம், ஓர் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்படுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாவட்டம் முழுமைக்கும்...**

இந்த மகளிர் காவல் நிலையம் ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தாலும், இதன் ஆளுகை எல்லை, மற்ற காவல் நிலையங்களைப் போல் குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் அல்லாமல், சென்னை மாவட்டம் முழுமைக்கும் செயல்படத்தக்க வகையில், தனித்தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளது. பெண்களின் நலன் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் காவல் நிலையத்தில், சென்னை மாவட்டத்தின் எந்தப் பகுதியைச் சார்ந்த பெண்களாக இருந்தாலும், அவர்கள் தங்கள் புகார் மனுக்களை இந்தக் காவல் நிலையத்தில் கொண்டுவந்து கொடுக்கலாம். இக்காவல் நிலையம் அவற்றைப் பெற்றுக்கொண்டு, முறையாகப் பதிவு செய்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் தொடர முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நமது தாய்மார்களும், சகோதரிகளும் தங்களது

வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளையும், துயரங்களையும் அனுபவித்து வருகிறார்கள். சொல்ல முடியாத சில பிரச்சினைகளில் சிக்குண்டு, தாங்கொணாத் துயரம் காரணமாகத் தற்கொலை செய்துகொள்ளும் சூழ்நிலைக்குக் கூட தள்ளப்படுகிறார்கள். தங்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து உதவ, யாரும் இல்லாத நிலையில் இருக்கும் இந்த அபலைச் சகோதரிகள், தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கினையும், அநீதியினையும் வெளியில் சொல்லக் கூட வெட்கப்பட்டுத் தன்னுள்ளே மனம் புழுங்கி, செய்வதறியாது வாழும் நிலை சில இடங்களில் இன்றும் நிலவுகிறது.

சட்டத்தில் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தபோதிலும், தனிப்பட்ட தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அவர்கள் காவல் நிலையத்தை அணுகுவது




அரிது. ஏனெனில், ஆண்களே பெரும்பாலும் பணிபுரியும் காவல் நிலையங்களில், தங்களது சோகக் கதையை வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொல்லத் தயங்குகிறார்கள். எனவே அங்கு செல்வதையே தவிர்க்கிறார்கள். எனவே அங்கு தன் தலைவிதி இதுதான் என்று நொந்து, தங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று, எங்கள் அரசு கொண்டுள்ள எண்ணத்தின் வெளிப்பாடு தான், இன்று இங்கே தொடங்கப்பட்டுள்ள, தமிழகத்தின் முதல் மகளிர் காவல் நிலையம். இக் காவல் நிலையத்திற்குத் தங்களது குறைகளை எடுத்துச் சொல்ல, பெண்கள், எவ்விதத் தயக்கமும் இன்றி வந்து பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வாழ்க்கையில் எவ்வித உதவியும் இன்றி நிராதரவாய் நிற்கும் பெண்களுக்கு, இப்புதிய திட்டம் நல்லதொரு பாதுகாப்பு அரணாக அமையும் என்று, நான் திடமாக நம்புகிறேன்.

**தாயன்பின் மேன்மை**

தாயின் அன்பை உணராதோர் உலகில் இல்லை. அந்த அன்பு எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத உயர்ந்த ஒன்றாகும். தவறு செய்யும் குழந்தைகளைத், தாயன்பால் நிச்சயமாகத் திருத்த முடியும் என்பதை நாம் அறிவோம்.

அவ்வாறே மகளிர் காவலர்களின் கடந்த காலப் பணியினை உற்று நோக்கினால், குற்றவாளிகளின் மன மாற்றத்திற்கு, அவர்களின் அணுகுமுறை பேருதவியாக இருந்துவருவது தெரியவரும்.

பெரும்பாலும் இளங் குற்றவாளிகளும், முதல் முறையாகக் குற்றம் புரிவோர்கள் பலரும், அவர்கள் செய்துவிட்ட குற்றத்தினை எண்ணி வருந்தும் நிலையிலேயே இருப்பார்கள். அந்த மனநிலையில் உள்ளோரை, மீண்டும் தவறு செய்யாமல் நிரந்தரமாகத் தடுத்தாட் கொள்ளும் திறமை, மகளிர் காவலர்களிடையே உள்ளது. இதுபோன்ற குற்றவாளிகளைத் தாயன்போடு அணுகி, கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும், அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடுகளைத் திருத்தும் கைவண்ணம், பொதுவாக மகளிர் காவலர்களிடம் இருக்கின்றது.



## பாரதியும், பாரதிதாசனும் உலகிற்கே சொந்தம்!

‘‘இங்கு பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார் இருவரின் உருவப்படங்களும் திறக்கப்பட்டன. யாருக்குப் பாராட்டுக் கூறுகிறோம் என்று சொல்வதைவிட யாருக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம் என்று நினைத்தால் எதிர் காலத்திற்கு நன்மை கிடைக்கும்’’.

‘‘பாரதியும் பாரதிதாசனும் யாருக்குச் சொந்தம்? தமிழ் நாட்டுக்கு மட்டுமா? இந்தியாவுக்கு மட்டுமா? உலகத்திற்கே சொந்தம்! ‘வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு’ என்று சொல்லிச் சென்றார் பாரதி. அவர் வாழ்ந்த திருநாடு இது என்கிறோம்’’.

‘‘இளைஞர்கள் அனைவரும் ஜாதி வேற்றுமைகளைக் களையும்படி சொன்னார் பாரதி. அதைத் தொடர்ந்து சொன்னார் பாரதிதாசன்’’.

‘‘பாவேந்தர் பல்கலைக் கழகம் தமிழக மக்களின் ஆசியுடன் இன்று தொடங்கப்படுகிறது. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க, தாய் என்னென்ன சிரமப்படுவாளோ அதே போலத் தமிழக அரசு, தமிழக மக்களின் ஆதரவில் தொல்லைகளை எல்லாம் மறந்து இது போன்ற நல்ல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வருகிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்று என்னால் நிச்சயமாக எண்ணிப் பார்க்க முடிகிறது. நாட்டுக்கு என்னென்ன பயனுள்ள பணிகளைச் செய்ய வேண்டுமோ இவற்றைச் செய்கிறோம் என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்’’.

**-டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1982-இல், திருச்சியில் ‘பாவேந்தர்’ பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசியதிலிருந்து.**

எனவேதான் முற்றிலும் மகளிரையே கொண்ட காவல் நிலையத்தை அமைக்கலாம்; அதில் குறிப்பாக இளங் குற்றவாளிகளையும், முதல் குற்றவாளிகளையும் கையாளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. சட்டங்களின்படி ஒருவர் புரிந்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்பட்ட போதிலும், அவர் மீண்டும் குற்றங்கள் செய்யாமல் தடுக்கத் தேவையான முயற்சிகள், இதுவரை காவல் துறையினரால் மேற்கொள்ளப்படவில்லை.

### திருத்தும் முயற்சி

ஆக்கபூர்வமான இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால், நாள்தோறும் உயர்ந்து கொண்டே இருக்கும் குற்றவாளிகளின் பட்டியலை, நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும். இது மேலும் சிறப்பாகச் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வழிவகுக்கும்.

முதல் முயற்சியாக மேற்கொண்டுள்ள இந்தப் புதிய மகளிர் காவல் நிலையம், அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்யும் என்று நம்புகிறேன். இந்த மகளிர் காவல் நிலையத்தில், ஒரு காவல்துறைப் பெண் ஆய்வாளரும், 3 பெண் உதவி ஆய்வாளர்களும், 6 பெண் தலைமைக் காவலர்களும், 24 பெண் காவலர்களும் பணியில் இருப்பார்கள்.

இப்புதிய திட்டத்தின் செயல்பாட்டினை, மூன்று மாத காலத்திற்குக் கண்காணித்து, தேவை இருப்பின் தக்க மாற்றங்கள் செய்து, அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். அதன் பின்னர், இதர முக்கிய நகரங்களுக்கும்விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புதுவகைச் சீருடை

பெண் காவலர்களுக்கான சீருடை, விரைவில் மாற்றி அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் தெரிவித்தேன். அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் பணிபுரியும் பெண் காவலர்கள், புதிய மாதிரியான சீருடையை அணிவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் கலந்துகொண்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று தொடங்கப்பட்டுள்ள மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் துறையினர், சிறப்பாகப் பணியாற்றி, இத்திட்டத்தை வெற்றி அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.’

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

### மூவருக்கு வேலைவாய்ப்பு

விழா முடிவில் - காவல் துறையில் பணியாற்றி இறந்த மூன்று காவலர்களின் துணைவியார்களான திருமதி கே.எம். சரோஜா, திருமதி கே. பச்சையம்மாள், திருமதி அஞ்சலிதேவி ஆகிய மூவர்க்கும் கருணை அடிப்படையில், அவரவர் தகுதிகளுக்கேற்ப வேலைவாய்ப்புக்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.**

# பாட்டாளி உழைப்பினிலே...

—புலவர் சி. துரைசுவாமி



பாட்டாளி உழைப்பினிலே உலகம் ஓங்கும்
பரிதி ஒளி கண்டவுடன் இருளும் நீங்கும்
தீட்டுகின்ற கல்வியிலே அறிவும் தேங்கும்
தித்திக்கும் இனிய சொல்லே நட்பில் சேரும்
கூட்டாளி நல்லமைப்பில் சக்தி வாழும்
குணமிகுந்த உயர் இடமே குடிகள் சூழும்
சூட்டுகின்ற மகுடமதில் நீதி தேறும்
தூய்மையுறும் ஞானமதே உலகை ஆளும்!

மின்னுகின்ற வானமதில் இடியும் தோன்றும்
மேன்மைமிகும் உழைப்பாலே வளங்கள் தோயும்
பொன்னை புது அனலில்இடப்புதுமை காணும்
பொய்யில்லா மெய்மைதனை புகழே வாழ்த்தும்
தன்னலத்தை விடுத்துழைப்பை உலகம் போற்றும்
தாவுகின்ற ஈகைவளம் ஏழ்மை போக்கும்
சின்னஞ்சிறு ஆலின்வித்தே நிழலாய்க் காக்கும்
தேயத்தோர் உழைப்பனைத்தும் இன்பம் தேக்கும்!

வளமான இருகரையின் நதியும் போன்று
வாழ்வினிலே உழைக்கின்ற உழைப்பும் ஆமே
களங்காணும் வீரத்தின் வெற்றி ஒப்ப
காசினியில் போற்றமைதல் படைப்பின் ஆற்றல்
பளபளக்கும் காஞ்சிநகர் பட்டாம் ஞாலம்
பாடுபடும் உழைப்பிலுறும் இசையும் அஃதாம்
உளம்வருத்தும் உறுபசியே மாந்தர்க்(கு) அற்று
உலகமெலாம் போற்றுதல் பாட்டாளி நாடாம்!

பொம்மையினை சர்க்கரையால் செய்து வைத்துப்
புதுமையுற சுவைத்திட நா இனிக்கும் எங்கும்
இம்மையிலே ஈன்றோர்கள் படைத்த தேகம்
எல்லோர்க்கும் பயன்விளைத்தல் உழைப்பே யாகும்
செம்மையிலே குடிக்கமைந்த செங்கோல் நீளும்
செழுமைமிக பாடமைந்த வளங்கள் நன்றாம்
எம்முடையர் என்றும்பிறர் இனத்தா ரென்றும்
இனம்பிரியா உடல்உழைப்பால் காத்தல் இறையாம்!





## தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகம் தமிழக அரசால் மீண்டும் அமைக்கப்பட்டது!

# அனைத்துக் காவலர்க்கும் குடியிருப்பு வசதி!

## மாண்புமிகு தமிழக முதல்வர் உறுதி!

**சென்னையில்** உள்ள புளியந்தோப்புப் பகுதியில், காவல் துறையினருக்கான குடியிருப்புக் கால்கோள் விழா, 13.4.1992 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயல்லிதா அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு புதிதாக அமையவிருக்கும் காவலர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார்.

**வரவேற்புரை:**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. கே.கே. இராஜசேகரன் நாயர் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

'காவலர்களுக்காக இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகள் அரசு மூலம் கட்டித் தரப்படும். அதற்கான முதல்கட்டப் பணியே இது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், மூன்று கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் சென்னை, விழுப்புரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மணிமுத்தாறு, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படும்' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

**முதல்வர் உரை:**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், புளியந்தோப்பில், ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 112 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன.

இதற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:






''தமிழ்ப் புத்தாண்டான இன்று மகிழ்ச்சிகரமான நாள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட காவலர் குடியிருப்புக்கான வாரியம், யாருக்கும் நன்மை செய்யக்கூடாது என்ற எண்ணமுடைய கடந்த கால ஆட்சியில் கலைக்கப்பட்டுவிட்டது; நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்கெல்லாம் புரிந்திருக்கும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழி நின்று இன்று வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் இன்று அதே வீட்டு வசதிக் கழகத்தை மீண்டும் அமைத்திருக்கிறோம்; அதற்குப் புத்துயிரூட்டியிருக்கிறோம்.

காவலர்களின் பணி எளிதானதல்ல; மக்களின் உயிருக்கும் உடைமைக்கும், தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருப்பது காவல்துறை. எங்காவது ஒரு தவறு நடந்துவிட்டால் காவல்துறையே அதற்குப் பொறுப்பு என்று பழி சுமத்துகிறார்கள்; எங்கோ ஒரு கோயில் சிலை உடைந்துவிட்டாலும் கூட காவல்துறை தூங்கியதா என்கிறார்கள்; வீட்டிலே திருட்டு நடந்துவிட்டாலும் காவல்துறை கவனக்குறைவாக நடந்ததாகக் கேள்விகேட்டுப் பழிசுமத்துகிறார்கள்.

தமிழ்நாட்டின் மக்கள்தொகை சுமார் ஆறு கோடியாகும்; உயிருக்கும் உடைமைக்கும் தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருக்கும் காவலர்களின் எண்ணிக்கையோ 69 ஆயிரம்; அதாவது, ஆயிரம் பேருக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் தான் இருக்கிறார்கள்.

இப்படி இருந்தும், சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டிப் பாதுகாப்புத்தருவதில் நாம் மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறோம்.

இப்படிப் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாவலர்களாக இருக்கும் காவல் துறையினருக்குப் போதுமான குடியிருப்புகள் இல்லை; காவலர்களின் மனைவிகளும் குழந்தைகளும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய நிலையிலிருந்து அவர்களை மீட்க - அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தோடு மீண்டும் வீட்டுவசதிக் கழகத்தை உயிர்ப்பித்துப் புதிய பல திட்டங்களைச் செயல்படுத்தவிருக்கிறோம்; முதல் கட்டமாக இந்தக் குடியிருப்பு உருவாகவிருக்கிறது.

எல்லா மட்டத்திலும் உள்ள அனைத்துக் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்துதருவது என்பது இந்த அரசின் இலட்சியமாகும்; காவல் துறை மற்றும் பொது மக்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் இந்த இலக்கை எட்டிப் பிடிப்போம்...''

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில் - காவல்துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. கே.கே. ராஜசேகரன் நாயர் இருவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புத்தாண்டு நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் முதலான மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், நடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு-காவல்துறை உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தார்கள்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: 'ராஜூ'**

# பகுத்தறிவுக் கவிஞர்

**பா**ரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை.

அவர் புதுமைக் கருத்துக்களையும், புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால், அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

**—தந்தை பெரியார்.**



## பெரியார் மாவட்டத்தில்...

# சமுதாய நலப்பணிகள்

பெரியார் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 147 பள்ளி சத்துணவு மையங்களின் சமையற் கூடங்களையும், 439 குழந்தைகள் நல மையங்களையும் பழுது நீக்கம் செய்து தர, தொழிலதிபர்கள், தொண்டு நிறுவனங்கள், தாராள மனம் படைத்த தனியார் தத்து எடுத்துக் கொண்டனர். அதில் இதுவரை 94 பள்ளி சத்துணவு மையங்களின் சமையற் கூடங்கள் ரூ.63,765 செலவிலும், 320 குழந்தைகள் நல மையங்கள் ரூ.2,73,806 செலவிலும் பழுது நீக்கம் செய்யப் பட்டுள்ளன.

மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை, தாராபுரம், குண்டடம், மூலனூர், காங்கேயம், வெள்ளக் கோயில், கோபி, நம்பியூர், தாளவாடி ஆகிய ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட அனைத்து மராமத்துப் பணிகளும் முடிக்கப் பட்டு விட்டன.

பிற்பட்ட வகுப்பினருக்கு 'பிரிமெட்ரிக்' கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், ரூ.1,52,000 ஒதுக்கீட்டுத் தொகையில், ரூ.79,385 செலவு செய்யப்பட்டு இதனால் 3,346 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.17,83,068 செலவு செய்யப்பட்டு, 6,263 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். இலவசக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ரூ.8,62,000 ஒதுக்கீட்டில் ரூ.8,83,618 செலவு செய்யப்பட்டு 1,260 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் நீர் வளத்தை மேம்படுத்தும் பொருட்டும், இறவைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும், சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் பொருட்டும் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் 170 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.9.5 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கிணறு வெட்ட, கிணறு ஆழப் படுத்த, பம்ப் செட் வைக்க போன்ற பணிகளுக்காகக் கடன் பெறும் விவசாயிகளுக்கு 25 முதல் 50 சதம் வரை உதவி வழங்கப்பட்டுள்ளது. பெருந்துறை, சத்தியமங்கலம், தாராபுரம், கோபி, பவானி வட்டார விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ.4.5 இலட்சம் மானிய மதிப்பில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சத மானிய உதவியுடன், சிறு குறு விவசாயிகளுக்கு 50 சத மானிய உதவியுடனும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியத்துடனும் தூவல் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நபர் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் வரை மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் (1990-91) 3.50 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 3,58,478.650 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.358.478 இலட்சம் ஆகும்.

நியாய விலையில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திற்கும் ஒரு அங்காடி என்ற முறையில் பொது விநியோகத் திட்டம் தமிழக அரசால் 1978-79-இல் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படி, 745 கிராம அங்காடிகளையும், 102 நகர்ப்புற அங்காடிகளையும் நடத்தி குடும்பக் கார்டுதாரர்களுக்குத் தேவைப்படும் கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்கி இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன. மாதந்தோறும் திடீர் ஆய்வுகள் நடத்தி, பொது விநியோகத் திட்டத்தில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறாவண்ணம் கண்காணிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப் பட்டுள்ளது. 31.3.92 முடிய 8,409 பயனாளிகளுக்கு ரூ.212.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் பொருளியல் 107 சதவிகிதம் சாதனை எய்தியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் 10 இலட்சம் செடிகள் உருவாக்கப்பட்டு 450 எக்டேரில் நடவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 28.10 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. சமூகக் காடுகள் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 3 ஊராட்சிகளில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 இலட்சம் பனை விதைகள் 211 எக்டேரில் நடும் பணி முடிவுற்றுள்ளது.

**பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 3.4.92 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள்.**

ஒவ்வொரு நிமிடமும் இன்பமாக இருக்க, அறிவுடன் கூடிய விடா முயற்சியும், பிறரை நேசிக்கும் அருங்குணமும் இருந்தால் போதும். நமது சேமிப்பில் இருந்து எவ்வளவு எடுத்துக் கொடுத்தாலும் இந்த இரண்டின் அளவும் குறையவே குறையாது. வடடியுடன் முதலும் நிச்சயமாக மீண்டும் வந்து சேர்ந்துவிடும். முதலில் செய்யுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம்.

-ஜேம்ஸ் ஆலன்



# மரம் வளர்ப்போம்

சமுதாய வளத்துக்கும் நலத்துக்கும் மரங்கள் இன்றியமையாததாகிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும், மழை வளத்துக்கும் அது துணைபுரிகிறது.

'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!' என்பது செயல் வடிவில் வர அனைவரும் ஆர்வம் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் சில மரங்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்வோம்:

**மூங்கில்**

மூங்கில் சிறு மூங்கில் (கல் மூங்கில்) பெரு மூங்கில் என இரு வகைப்படும்.

கடல் மட்டத்திலிருந்த 1000 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் இது வளரும். ஆற்று ஓரம், ஓடை ஓரம் ஈரமான இலையுதிர்க் காட்டுப் பகுதிகளிலும் நிழலுள்ள அடர்ந்த காடுகளிலும் இம்மரம் செழித்து வளருகின்றது.

சதுப்பு நிலப்பகுதிகளிலும், ஆறு, ஓடை, வயல், நதி ஆகியவைகளின் ஓரப் பகுதிகளிலும் ஈரமுள்ள தரிசு நிலப் பகுதிகளிலும் இம்மரங்களை வளர்க்கலாம்.

மூங்கில், காகிதம் மற்றும் ரயான் தயாரிக்க பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது. சாரம் கட்டவும் குடிசைகள் கட்டவும், ஓட்டு வீடுகள் கட்டவும் பயன்படுகின்றன. விவசாய இரும்புக் கருவிகளுக்குக் கைப்பிடிகள் செய்யவும், கூடை, தட்டிகள், பெட்டிகள், கட்டில், விசிறி, குடை, பொம்மை, குழாய், வாத்தியக் கருவி, ஏணி, கூடாரக் கழிகள் போன்ற அநேக விதமான உபயோகமுள்ள பொருட்கள் செய்யப் பயன்படுகிறது. வேலி அமைத்தல், மரச் சாமான்கள், ஈட்டி, பாய், கட்டுமரம் ஆகியவைகளுக்கும் பயன்படும். இதன் இளம் துளிர் ஊறுகாய்க்கும் பயன்படுகிறது.

**சவுண்டல் மரம்**

சவுண்டல் மரத்தில் பல உயர் இரகங்கள் உள்ளன. அவைகளில் கே-8, கே-28, கே-29, கே-67, கே-72, மற்றும் கே-32 சிறந்தவையாகும். நமது மாநிலத்தில் கே-28 இரகம் நன்றாக வளர்வதால் இதைப் பெருமளவில் நடுவது நன்று. சவுண்டல் மிக உயரமாக வளரக் கூடிய மர வகையைச் சார்ந்தது. சவுண்டல் , தழை மற்றும் முதிராத காய்கள் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகக் கருதப்படுகிறது.

கடல மட்டத்திலிருந்து 1000 கி.மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளில் நன்கு வளரும். மழை, வெய்யில், நெருப்பு, காற்று, சூறாவளி, வறட்சி ஆகியவைகளால் ஏற்படும் பாதிப்புகளை ஓரளவு தாங்கக் கூடியது. இதை மானாவாரியாகவும் பயிரிடலாம். இருப்பினும் நீர் பாய்ச்சுவதன் மூலம் வளர்ச்சியைக் கணிசமான அளவில் அதிகரிக்கலாம். சதுப்பு நிலங்களிலும், நீர் நீண்ட நாட்கள் தேங்கி நிற்கும் இடங்களிலும் சவுண்டல் வளராது. கற்களும், சரளையும் நிறைந்த மண்ணிலும், அமிலத் தன்மையுள்ள மண்ணிலும் சவுண்டல் நன்கு வளராது. வடிகால் வசதியுள்ள மண்ணிலும், சத்துள்ள மண்ணிலும் போதுமான அளவில் மழை அல்லது நீர்ப்பாசனம் இருப்பின் சவுண்டல் நன்றாக வளரும்.

கால்நடைகள் சவுண்டல் இலை, முதிராத காய்களை விரும்பிச் சாப்பிடுவதால் வேலியிட்டுப் பாதுகாப்பது அவசியம்.

புல் விதைத்த 6 மாதங்களுக்குப் பிறகு புற்களை அறுத்துக் கால்நடைகளுக்குப் போடலாம். இத்தகைய அமைப்பில் சவுண்டல் தழைகளும் புற்களும் கலந்து உள்ளன. அதனால் புரதச்சத்து நிறைந்த தீவனம் கால்நடைகளுக்குக் கிடைக்கிறது.

**கால்நடைத் தீவனமாக உபயோகிக்கும் முறை**

சவுண்டல் தழையில் மையோசின் என்ற இரசாயனப் பொருள் உள்ளது. எனவே, அசை போடுகின்ற கால்நடைகளின் உணவில் சவுண்டல் தழைகளைச் சுமார் 30

சதவிகிதம் வரை சேர்த்துக் கொள்ள லாம். அதற்கு மேல் சேர்க்கக் கூடாது. அசை போடாத கால்நடை களின் உணவில் 10 சதவிகிதம் சேர்த்தால் போதுமானது. கோழி, பன்றி, முயல், வான்கோழி போன்ற வைகளுக்கும் உணவில் சேர்த்துக் கொடுக்கலாம்.

**புளிய மரம்**

புளிய மரம் கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகளிலும் நன்கு வளரும். எல்லா வகையான நிலப்பகுதி களிலும் இம்மரம் வளரும். வெப்பப் பிரதேசத்திலும் சரி, அல்லது மித வெப்பப்பிரதேசத்திலும் சரி, இது நன்றாக வளரும். இந்தியத் துணைக் கண்டத்தில் நெடுநாள் வாழக்கூடிய மர இனங்களில் இதுவும் ஒன்று. 750 மி.மீ. முதல் 1250 மி.மீ. வரை சாதாரணமாக மழை பெய்யும் இடத்தில் வளரும்.

சாலை ஓரங்கள், தரிசு நிலப் பகுதிகள், உபயோகமற்ற வளம் குறைந்த நிலப் பகுதிகள், ஆகிய எப்படிப்பட்ட இடத்திலும் உற்பத்தி செய்யலாம். செடிகள் வறட்சியைத் தாங்கும் தன்மையுடையன. வண்டல் மண் பிரதேசங்களில் நன்றாக வளரும்-

இதன் தழை கால்நடைகளின் தீவனத்துக்கும், பூ, காய், பழம் ஆகி யவை சமையலுக்கும் பயன்படு கிறது. இதன் கொட்டைகள் எரு வாகவும் மாட்டுக்குத் தீவனமாகவும் பயன்படுகிறது. மரம் நல்ல விற காகப் பயன்படுகிறது. இதன் பழத்தோலும் நல்ல எரிபொருள். மேலும், இம்மரத்தைச் சுட்டு எரித்து நல்ல கரியும் தயாரிக்கலாம். இம் மரம் கெட்டியானதாகவும் உறுதி யானதாகவும் இருப்பதால் இதனை உலக்கை மற்றும் கருவிகளின் கைப் பிடிகள் போன்றவை செய்ய உப யோகப்படுத்தப்படுகின்றது. புளியன் கொட்டையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் வர்ணம், வார்னிஷ் முதலியனவும் செய்யப்படுகிறது.

**சவுக்கு மரம்**

சவுக்கு மரங்கள் ஆஸ்திரேலியா நாட்டில் இயற்கையாக வளர்கிறது. மற்றும் சிட்டகாங், அந்தமான், நிக்கோபார், மலேசியா மற்றும் கிரீன்ஸ்லேண்ட் ஆகிய நாடுகளிலும் வளர்கிறது. கர்நாடக மாநிலத்தில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பி ருந்தே சவுக்கு மரங்கள் வளர்ந்த தற்கான ஆதாரங்கள் உள்ளன. இம் மரம் சுமார் 30 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. இம்மரம் 50 ஆண்டுகள் வரை உயிருடன் இருக்கும் ஆனால் 5 முதல் 7 ஆண்டுகளுக்குப் பிறகு வளர்ச்சி யின் அளவு குறைவதால் மரங்களை அந்த வயதில் அறுவடை செய்வது நல்லது.

சவுக்கு மரங்களில் சுமார் 35 வகைகள் உள்ளன. அவற்றில் Casuarina Equisetifolia என்ற வகை நம் நாட்டில் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ற வகையாகும். விதைகள் கடுகை விடச் சிறியதாக இருக்கும். ஒரு கிலோ கிராம் எடையில் சுமார் 7,50,000 விதைகள் கிடைக்கும்.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளில் மணற்பாங்கான மண் வகைகளில் நன்கு வளரும்.

இது அதிக மழை பெய்யும் இடங் களிலும் தண்ணீர் அதிகமாகத் தேங்கி நிற்காத இடங்களிலும் நன்கு செழித்து வளரும் அதிக வறட்சியை இம்மரம் தாங்காது.

இம்மரத்தை விறகிற்காக அதிக மாகப் பயன்படுத்துகிறார்கள். சவுக்கு விறகு ஒரு சிறந்த எரிபொருளாகக் கருதப்படுகிறது. இம்மரத்தின் (கலோரிபிக் மதிப்பு) வெப்ப நிலை அதிகமாக உள்ளதால், அடுப்பு எரிக்க அதிக அளவில் உபயோகிக் கப்படுகிறது.

சவுக்கு மரக்கொம்புகள் கட்டட வேலைகளுக்குச் சாரம் கட்டவும், கூரை, பந்தல் போடுவதற்கும், மின் சாரக் கம்பங்களாகவும், விவசாயக் கருவிகளுக்குக் கைப் பிடிகளாகவும் பல வகைகளில் உபயோகப்படு கின்றது.

கடற்கரை ஓரங்களில் பலத்த காற்றினால் மண் அரிப்பு ஏற்படு வதைத் தடை செய்வதற்கும், காற்றில் பறந்து செல்லும் மணலைத் தடை செய்து மணல் மேடுகள் நகர்வதைத் தவிர்க்கவும் இது உதவுகிறது.

## கொசுத் தொல்லையைக் குறைக்க...

சென்னை மாநகராட்சி கொசுத் தொல்லையைக் குறைக்கப் போர்க்கால அடிப்படையில் தீவிர திட்டத்தைத் துவக்கியுள்ளது. 155 கோட்டங்களிலும் கொசு உற்பத்தி நிலைகள் கண்டறியப் பட்டு அங்கெல்லாம் வாரம் ஒருமுறை மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. 50 புகைபோடும் எந்திரங்கள் (கைகளால் இயக்கப்படுபவை) பயன் படுத்தப்பட்டு கொசுக் கொல்லிப் புகைபோடப்படுகின்றன. இதைத் தவிர 250 முதல் 300 மருந்தடிப்பவர்கள் மூலம் நாள்தோறும் கொசு மருந்து தெளிக்கப்படுகின்றது.

சென்னை மாநகரில் 4 பெரிய நீர் வழிகள் (அடையாறு, கூவம்-பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா) மற்றும் 9 பெரிய வடிகால்வாய்கள் உள்ளன. இவற்றிலேயே சென்னையில் உள்ள கொசுக்களில் 50 சதவிகிதம் உற்பத்தியா கின்றன. இவற்றில் கொசுப் புழுக்களை அழிக்கும் மருந்துகள் தெளிக்கப் படுகின்றன.

சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. இரா.பூர்ணலிங்கம், 18.3.92 அன்று அடையாறு கூவம் இவை கடலோடு கலக்கும் கழிமுகத்தை பொதுப்பணித்துறை தலைமைப் பொறி யாளருடனும், மாநகராட்சி அதிகாரிகளு டனும் சென்று பார்வையிட்டார்.

கூவம் அடையாறு கழிமுகப்பகுதிகள் மணல் தடை அகற்றப்பட்டுத் திறக்கப் பட்டுள்ளன. இதனால் மேலேற்றத்தின் போது கடல்நீர் ஆறுகளின் உள் அதிக மாகப் புகுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது. இது கொசுக்களைக் கட்டுப்படுத்த உதவும். எனினும், இப்போது உள்ள திறப்பு மேலும் அதிகக் கடல்நீர் உட்புகுவதற்கும் போதுமானதாக இல்லை. ஆகையால், கழிமுகப்புகளை முழுமையாகத் திறந்து தாராளமாகக் கடல்நீர் உட்புக வழி வகுக்குமாறு பொதுப்பணித் துறையைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுப் பணித்துத் தலைமைப் பொறியாளர் உடனடியாக இப்பணியை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இன்னும் அதிகமாகக் கடல்நீர் உட் புகுந்து, கொசு உற்பத்தியைக் குறைக்க வழிபிறக்கும்.

# திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சித் திட்டப் பணிகள்



திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில், கடந்த 1991-ஆம் ஆண்டில் போதுமான மழை கிடைக்கப் பெறவில்லை. இயல்பான மழையளவான 836 மி.மீட்டருக்கு 746.1 மி.மீ. மழை மட்டுமே கிடைத்தது. மேலும் 1992-ஆம் ஆண்டில் மார்ச்சு முடியப் பெய்ய வேண்டிய இயல்பான மழை 60.4 மி.மீட்டருக்கு இதுவரை மழை ஏதுமின்றி வறட்சியாகவே உள்ளது.

தென்மேற்கு, வடகிழக்குப் பருவ காலங்களில் பெய்த மழையைக் கொண்டு நீர்த்தேக்கங்கள், கண்மாய்கள், கிணறுகளில் நீர்நிலை ஓரளவு உயரப் பெற்றது. இதனைக் கொண்டு இனவைப் பயிர்கள் சாகுபடி நடைபெற்றது. மானாவாரி நிலங்களில் சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்கள் சாகுபடி முழு அளவில் நடைபெற்றுத் தற்சமயம் அப்பயிர்கள் அறுவடையும் முடியும் நிலையில் உள்ளது.

**சாகுபடி மற்றும் எதிர்பார்க்கும் உற்பத்தி:**

நெல் சாகுபடி பரப்பு 25,000 எக்டேர் இலக்கில் 18,827 எக்டேர் நிலப்பரப்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. சிறு தானியங்கள் 1,15,000 எக்டேர் இலக்கில் 97,799 எக்டேர் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. பயறு வகைகள் 41,000 எக்டேருக்கு 43,648 எக்டேர் பயிர் செய்யப்பட்டுள்ளது. பருத்தி 9,100 எக்டேருக்கு 3,873 எக்டேரும், கரும்பு 5,000 எக்டேருக்கு 5,326 எக்டேரும், நிலக்கடலை 38,000 எக்டேருக்கு 33,395 எக்டேரும் பயிர் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் 90,000 மெ.டன் நெல் உற்பத்திக்குப் பதிலாக 75,308 மெ.டன் நெல் உற்பத்தியும், சிறு தானியங்கள், 1,70,000 மெ.டன்னுக்குப் பதிலாக 1,56,282 மெ. டன்னும், பயறு வகைகள் 20,000 மெ.டன்னுக்கு 22,871 மெ.டன்னும், பருத்தி 30,000 பேல்களுக்கு 12,780 பேல்களும், நிலக்கடலை 50,750 மெ.டன்னுக்கு 48,160 மெ.டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**கோடைச் சாகுபடித் திட்டம்**

1992-ஆம் ஆண்டு கோடைப் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, கரும்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கத் தற்சமயம் கோடைச் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் இம்மாவட்டத்திற்கு 2 இலட்சத்து 80 டன்கள் உணவு உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை சாகுபடி செய்யப்பட்டுள்ள 1 இலட்சத்து 60 ஆயிரம் எக்டேர் உணவுப் பயிர்களிலிருந்து 2 இலட்சத்து 55 ஆயிரம் டன்கள் உணவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் கோடைச் சாகுபடியில் தீவிரக் கவனம் செலுத்தி உணவு உற்பத்தினய மேலும் அதிகரிக்கச் செய்ய செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சிறு, குறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உர விநியோகம்:**

இம்மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.192 இலட்சம் மதிப்பிற்கான உரங்கள் சலுகை விலையில் வழங்கப்பட உள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரம் பெறுவதற்கான அடையாள அட்டைகள் வேளாண் துறையினராலும், கிராமத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் உரங்கள் கூட்டுறவுத் துறையினராலும் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மொத்தம் 1,56,644 சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இவர்களில் 1,06,073 சிறு, குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.143.47 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**தெளிப்பு நீர்ப்பாசன மானியம்:**

தேசியப் பயறு பெருக்கத் திட்டம் மற்றும் எண்ணெய்வித்துப் பெருக்கத் திட்டத்தின்கீழ் 80 தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்திட ரூ.8 இலட்சம் மானியமாக வழங்கிட நிதி இலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சத மானியமும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியமும் வழங்கப்படுகிறது.

**சிறுபாசனத் திட்டம்:**

மைய அரசு உதவியுடன் ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, நத்தம், பழனி வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.17.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சிறு விவசாயிகளுக்கு 25 சத மானியமும், குறு விவசாயிகளுக்கு 33.33 சதவீதமும், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 50 சத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கிணறு அமைத்தல், டீசல் பம்புகள், மின் கம்பிகள், பாசனக் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

—எம்.பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

## வளரும் வேளாண்மை:

# டி.கே.எம். 10 - புழுதிக்காலுக்கேற்ற உயர் விளைச்சல் புதிய நெல் ரகம்

டாக்டர் எம். சுப்பிரமணியன்,
அ. தியாகராஜன், எ. கோவிந்தன்,
கே. நீலகண்டபிள்ளை,
டாக்டர் டி.பி. இரங்கநாதன்,
டாக்டர் கே.எஸ். பரமசிவன்
நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சுமார் 44,000 எக்டர் நிலத்தில் புழுதிக்கால் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. புழுதிக்கால் சாகுபடிக்கேற்ற குறிப்பிடும் படியான உயர் விளைச்சல் நெல் இரகம் இல்லை. எனவே டி.கே.எம். 1 (பிசினி) உள்ளூர் நெல் இரகம் இளம் பருவத்தில் ஏற்படும் வறட்சியைத் தாங்கி, பின்பு பருவ மழை கிடைத்தவுடன் துளிர் விட்டு வளரும் தன்மை கொண்டதன் காரணமாக, பெரும்பான்மையான இடங்களில் புழுதிக்கால் சாகுபடி செய்யப்படுகிறது.

இது தவிர பி.ஏ.எம். 3 (பய்ய குண்டா), வாடன்சம்பா, கப்ப சம்பா போன்ற நாட்டு இரகங்களும் ஐ.ஆர்.20 மற்றும் வெள்ளை பொன்னி போன்ற உயர் விளைச்சல் இரகங்களும் பயிர் செய்யப்படுகிறது. மேற்கூறிய நாட்டு இரகங்கள் குறைந்த மகசூல் தருவதாலும் உயர் விளைச்சல் இரகங்கள் இளம் பருவத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மை இல்லாமையின் காரணமாக மகசூல் ஒரே சீராக இல்லாமல் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே புழுதிக்காலுக்கேற்ற வறட்சியைத் தாங்கி வளரும் உயர் விளைச்சல் இரகம் ஒரு நீண்டகாலத் தேவை. அதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொண்டதன் பயனாக டி.கே.எம். 10 நெல் இரகம் 1992-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் வெளியிடப்பட்டது.

டி.கே.எம். 10 நெல் இரகமானது செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்குப் புழுதிக்கால் சாகுபடிக்கேற்றது. இந்த இரகமானது நடுத்தர வயது கொண்டது. (135 நாட்கள்) வறட்சியைத் தாங்கவல்லது. கோ 31 (ஒட்டு மானாவாரி சம்பா) இரகத்தையும் சி.22, பிலிப்பைன்ஸ் நாட்டு வறட்சியைத் தாங்கும் உயர் விளைச்சல் இரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது. டி.கே.எம். 10 புதிய இரனமானது 1985 ஆண்டிலிருந்து நான்கு சம்பா பருவத்திலும் திரூர், நெல் ஆராய்ச்சி நிலைய சோதனைத் தளைகளில் சராசரி மகசூலாக எக்டருக்கு 2000 கிலோ கொடுத்துள்ளது.



இந்த இரகம் ஐ.ஆர். 20-ஐக் காட்டிலும், 85 சதவிகிதம் டி.கே.எம். 1-ஐக் காட்டிலும், 82 சதவிகிதம், மற்றும் கோ 31-ஐக் காட்டிலும் 30 சதவிகிதம் கூடுதல் மகசூல் தந்து உள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 47 இடங்களில் அனுசரனை ஆராய்ச்சிச் சோதனைகள் மூலம் இரண்டு ஆண்டுகளாகப் பரிசோதனை செய்யப்பட்டதில் டி.கே.எம்.10 நெல் இரகம் சராச்ரியாக எக்டருக்கு 2,900 கிலோ மகசூல் தந்துள்ளது. இந்த இரகம் டி.கே.எம். 1-ஐக் காட்டிலும் 28 சதவிகிதமும், ஐ.ஆர்.20-ஐக் காட்டிலும் 9.5 சதவிகிதமும் அதிக மகசூல் கொடுத்துள்ளது.

புழுதிக்கால் சாகுபடியில் டி.கே.எம். 10 நெல் இரகம் அதிகப்பட்சமாக எக்டருக்கு 5,200 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. நடுத்தர உயரம் கொண்ட இப்புதிய ரகம் எக்டருக்கு 5,500 கிலோ வைக்கோல் கொடுக்க வல்லது. இந்த இரகம் 15 முதல் 25 நாட்கள் இளம் பருவ வறட்சியைத் தாங்கவல்லது. பருவ மழை அல்லது நீர் கிடைக்கும்பொழுது உடன் துளிர் விட்டு வேகமாக வளரும் தன்மை கொண்டது.

இப்புதிய இரகத்தின் நடுத்தரச் சன்னமான வெள்ளை அரிசி பச்சை அரிசி மற்றும் புழுங்கல் அரிசி சமையலுக்கு மிகவும் ஏற்றது. டி.கே.எம். 10 நெல் ரகம் ஆனைக் கொம்பன், பச்சைத்தத்துப்பூச்சி, இலைச்சுருட்டுப் புழு ஆகியவற்றிற்கு மிதமான தாக்குதலும் கொண்டது. மேலும் குலைநோய், பழுப்பு நிறப் புள்ளி இலையுறை அழுகல் நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறனும் உள்ளது.

டி.கே.எம். 10 நெல் இரகம் ஜூலை - ஆகஸ்ட் மாதம் விதைப்புக்கு நாட்டு இரகங்களான டி.கே.எம். 1 (பிசினி), வாடன் சம்பா, உயர் விளைச்சல் இரகங்களான ஐ.ஆர்.20 மற்றும் வெள்ளைப் பொன்னி போன்ற இரகங்களுக்கு மாற்றுப் பயிராகப் புழுதிக்கால் பயிர்ச் சாகுபடி பரிந்துரை செய்யப்படுகிறது.

மாணவர் பக்கம்:

# அறிவுச்சுடர்

**விருது**

1. பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண்மணி திருமதி இந்திரா காந்தி

2. அமெரிக்காவின் மிகப்பெரிய விருதான 'மெடல் ஆப் பிரீடம்' என்ற சிவிலியன் விருது (Medal of Freedom) இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சருக்கு வழங்கப்பட்டது.

3. தென் ஆப்பிரிக்கத் தேசியத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு லெனின் சமாதானப் பரிசு 1990-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் வழங்கப்பட்டது.

**சில முக்கியமான நாடுகளும் அதன் தலைநகரங்களும்**

| | | |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | - | காபூல் |
| ஆஸ்திரேலியா | - | கான்பெர்ரா |
| பாங்களாதேஷ் | - | தாகா |
| மியான்மார் (பர்மா) | - | யாங்கோன் (ரங்கூன்) |
| கனடா | - | ஒட்டாவா |
| ஸ்ரீலங்கா | - | கொழும்பு |
| சீனா | - | பெய்ஜிங் |
| கொலம்பியா | - | பொகோடா |
| டென்மார்க் | - | கோபன்ஹேகன் |
| எத்தியோப்பியா | - | அடிஸ் அபாபா |
| பிரான்ஸ் | - | பாரீஸ் |
| ஹங்கேரி | - | புடா-பெஸ்ட் |
| இந்தியா | - | புதுடெல்லி |
| ஈரான் | - | டெக்ரான் |
| ஈராக் | - | பாக்தாத் |
| இஸ்ரேல் | - | டெல்அவிவ் |
| இத்தாலி | - | ரோம் |
| ஜப்பான் | - | டோக்கியோ |
| ஜோர்டான் | - | அம்மான் |
| மலேசியா | - | கோலாலம்பூர் |
| நேபாளம் | - | கத்மாண்டு |
| நெதர்லாந்து | - | ஆம்ஸ்டர்டாம் |
| நியூசிலாந்து | - | வெலிங்டன் |
| நைஜீரியா | - | லாகோஸ் |
| பாகிஸ்தான் | - | இஸ்லாமாபாத் |

**தொகுப்பு: ஸ்வீட்லின் பிரபாகரன்**



## யானை

நமது நாட்டில் யானைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா! 17,075 முதல் 22,080 யானைகளே உள்ளதென்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளம், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, அசாம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் 8,525 முதல் 11,930 யானைகளும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 6,000 முதல் 7,150 யானைகளும், ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் 2,000 முதல் 2,300 யானைகளும், உத்திரப் பிரதேச மாநிலத்தில் 550 முதல் 700 யானைகளும் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.





● 'நான்', 'எனது', என்பவை மூட நம்பிக்கைகளாகும். நாம் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால் இவைகளை உதறித் தள்ள வேண்டும்.

● எளிமையில்தான் வெற்றி இரகசியம் அடங்கி இருக்கிறது.

- சுவாமி விவேகானந்தர்

## ஒரு சொல் கேளீர்!

**—குழ. கதிரேசன்**

வாழைப் பழத் தோலை வழியில்
போடக் கூடாது — அதில்
வழுக்கி விழுந்து உடலும் ஊனம்
ஆகக் கூடாது!

உடைந்து போன கண்ணாடியை
ஓரம் போடணும் — ஆணி
காலைக் குத்திக் கிழித்துவிடும்
தூரப் போடணும்!

ஈ மொய்க்கும் பண்டங்களை
வாங்கக் கூடாது — நாம்
அழுகிப் போன பழங்களினை
உண்ணக் கூடாது!

விலை கொடுத்து நோய்களினை
வாங்கக் கூடாது — தலை
விதி செய்த கொடுமை என்று
கூறக் கூடாது!

# நூல் நயம்

## 'காட்டுக் குயில்கள்'

**ஆசிரியர்:** கொ.மா. கோதண்டம்

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

பக்கம்:92 விலை:ரூ.9/-

மலைவாழ் மக்களின் அவல வாழ்க்கையை மண்வாசனையுடன் சொல்லும் கதைகள்.

கொத்தடிமைகளாக்கப்பட்ட அவர்களின் துன்பங்களும், துயரங்களும் மென்மையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மக்களையும், அவர்களின் சுற்றுப்புறச் சூழல்களையும் சித்திரித்திருக்கும் விதம். நாம் அந்தச் சம்பவம் நிகழும் இடங்களிலேயே நின்றிருக்கும் பிரமையை உண்டாக்குகின்றன. மாறுபட்ட கதைத் தொகுப்பு. படித்து முடித்தபோது நெஞ்சம் கனக்கிறது.

—என்.குமார்.

## விண்வெளிப் படிகளில் இந்தியா

**ஆசிரியர்:** நெல்லை சு. முத்து

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

பக்கம்:191 விலை:ரூ.26/-

நம்நாடு பல்வேறு துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகிறது. அவற்றுள் விண்வெளி ஆராய்ச்சியும் ஒன்று. விண்வெளிப் படிகளில் இந்தியா படைத்து வரும் சாதனைகளை விளக்குகிறது இந் நூல்.

முதல் கட்டுரையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. இலக்கியத்தில் வானவியல் என்பது குறித்து - தமிழ் இலக்கிய மேற்கோள்களோடு அரிய கட்டுரையைப் படைத்திருக்கிறார் ஆசிரியர்.

விந்தைக்குரிய விண்வெளிப் பயணத்தில் பங்கேற்றுச் சாதனை புரிந்த முன்னோடிகளை நம் கண்முன்னே கொண்டு வருகிறார் ஆசிரியர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி குறித்தும், வானிலை இயல் குறித்தும் கூறப்பட்டுள்ள செய்திகள் அற்புதம். இவற்றோடு தொலைத் தகவல் தொடர்பு, தொலையுணர்வுச் செயற்கைக்கோள் பற்றிய தகவல்கள் மிகவும் பயனுள்ளவை. நல்ல தமிழில் எல்லாத்திறத்தாரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் எளிய இனிய தமிழில் படைத்திருக்கும் இந்த அறிவியல் படைப்பு பாராட்டுக்குரியது.

## இறைவா! இறைவா!

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்

**வெளியீடு:**

பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள்
முதல் தெரு
சென்னை-600 014

விலை: ரூ.10 பக்கம்: 96

மனிதன் இறைவனைப் பார்த்துக் கேட்கிறான். இறைவன் மனிதனுக்கு அறிவுரை கூறுகிறான். ஆசிரியரின் சிந்தனைச் சிதறல்களைப் பரக்கக் காண்கிறோம். சுவையான நூல்.

## பந்தயக் குதிரை

**ஆசிரியர்:** விமலாரமணி

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:196 விலை:ரூ.22/-

வசதியான தந்தை தன் மகளின் காதலை எதிர்க்க, காதலுக்காகப் பெற்றோரைத் துறந்து காதலோடு வர, காதலுக்குப் புற்று நோய்... வேலையின்மை... இப்படிப் போகிறது முதல் கதை பந்தயக் குதிரை.

அலுவலகத்தில் பரிவின் காரணமாக, காதல்வயப்பட்டு மணந்து பின்னர் அவன் தன்னைப் பணங்காய்ச்சி மரமாக மட்டுமே கருதுவது கண்டு வெதும்பும் கௌரி, கணவன் எதிர்ப்பை மீறி குழந்தைகள் பெற்று சுமங்கலியாகப் போய் விட கணவன் நிர்க்கதியாகிறான் இரண்டு கதைகளுமே சாதாரண, வழக்கமான கருவைக் கொண்ட கதைகள்தான். ஆசிரியரின் எழுத்தாற்றலால் இக்கதைகள் சுவை பெறுகின்றன.

## விஞ்ஞானிகள் வாழ்விலே...

**ஆசிரியர்:** பி.வி.கிரி

**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்,
5. ஸ்ரீபுரம் 2-வது தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:96 விலை:ரூ.12/-

வாழ்க்கை வரலாறுகள் நம் வாழ்வை வளமாக்க மட்டுமல்ல, வழிகாட்டவும் உதவுகின்றன. அந்த வகையில், இந்திய- மேலைநாட்டு அறிவியல் அறிஞர் பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளத் தக்க வகையிலே எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது இதன் சிறப்பு. இந்நூலில் 16 கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டுரைக்கும் படங்கள் இருப்பது வரவேற்கத் தக்கது.

—தே.மணி

## கா. நமச்சிவாயரின் நாடகங்கள்- ஓர் ஆய்வு

**ஆசிரியர்:** சோ. கருப்பசாமி

**கிடைக்குமிடம்:**

பயோனியர் புக் சர்வீஸ்
47, நல்லதம்பி தெரு,
சென்னை-600 005.

பக்கம்:176 விலை:ரூ.30/-

பேராசிரியர் கா. நமச்சிவாயர் இயற்றிய நூல்கள் பல. நாடகம், உரை நடை, புராண, இதிகாசப் பழங்கதைகள், வரலாற்றுக் கதைகள், இலக்கண உரை இவற்றோடு, அவர் பதிப்பித்த நூல்களும் ஏராளம். அன்னைத் தமிழில் அரிய பல படைப்புகளைப் படைத்த வள்ளல் கா. நமச்சிவாயரின் நாடகங்களைக் குறித்து ஆய்கிறது இந்நூல்.

நாடகக் கதையும் கருவும், நாடக மாந்தரின் பண்பு நலன்கள், நாடக மொழிநடை, நாடக நலன்கள் ஆகிய நான்கு இயல்களாகப் பகுத்துத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. நூல் முழுவதும் நமச்சிவாயரின் பாத்திரப்படைப்புகளும், பண்பு நலன்களும் பேசப்படுகின்றன. அழகுத் தமிழில் ஆசிரியரின் ஆழ்ந்த புலமைத் திறம் நன்கு வெளிப்படுகிறது. தமிழ் ஆர்வலர், ஆராய்ச்சி மாணவர் ஆகியோர் படிக்க வேண்டிய பயனுள்ள படைப்பு.

- பொ. மறைமலை.

(16—ஆம் பக்கத் தொடர்ச்சி)



## நிர்வாக அமைப்பு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் செயல்பாட்டிற்காக, நமது மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் கீழ் இயங்கி வந்தது. நிர்வாகச் சுமை மற்றும் பணிப்பளு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், கூடுதலாகப் புதிய 2 மண்டலங்கள், ஒன்று வேலூரையும், மற்றொன்று சிவகங்கையையும் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும் என்று, சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்தேன். அறிவிப்பிற்குச் செயல்வடிவம் தருகிற வகையில், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், மற்றும் சைதாப்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்களைத் தவிர்த்த செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் அடங்கிய பகுதிகளைப் புதிய மண்டலமாகப் பிரித்து, துணை ஆணையர் அலுவலகம் ஒன்று வேலூரில் தொடங்கப்பட்டு விட்டது.

அடுத்து, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் காமராசர் மாவட்டம் ஆகியவை புதிய மண்டலமாகப் பிரிக்கப்பட்டு, துணை ஆணையர் அலுவலகம் ஒன்றும், சிவகங்கையில் தொடங்கப்பட்டு விட்டது. தற்போது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ், 10 மண்டலங்கள், ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் தலைமையில், இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலம் 17 கோட்டங்களாகப் (Divisions) பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் கீழ் இயங்கி வருகிறது. அறநிலையத் துறையின் நிர்வாகம் மேலும் சீராக அமையவேண்டும் என்ற நோக்கத்துடன், 1992-92-ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின் கீழ், 2 புதிய அறநிலையத்துறைக் கோட்டங்களையும் உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும், தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு, சிதம்பரனார் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும் அமைக்க, விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். எனவே தற்போது 17 ஆக இருக்கும் அறநிலையத்துறைக் கோட்டங்கள், விரைவில் 19 ஆகச் செயல்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாக அமைப்பில் ஏற்பட்டுள்ள இத்தகைய கூடுதல் மண்டல மற்றும் கோட்ட அமைப்புகளினால், ஆலய நிர்வாகம் மேம்படும் என்று நம்புகிறேன்.

கோயில்கள் என்றாலே, வருமானம் சார்ந்த கணக்கு- வழக்குகளைப் பற்றிய பிரச்சினைகள் எப்போதும் எழுந்து வருவது, தற்போது வாடிக்கையாகிவிட்டது. ஆகவே, கோயில்களின் கணக்குகளைச் சரியான முறையில் தணிக்கை செய்ய, தணிக்கைப் பிரிவை மேம்படுத்துதல் மிகுந்த அவசிய மாகிறது. எனவே, தற்போதுள்ள தலைமைத் தணிக்கை அதிகாரியினுடைய பதவித் தரத்தை, இணை ஆணையர் தகுதிக்கு உயர்த்தவும்; திருத்தணி, ஸ்ரீரங்கம், இராமநாதபுரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பெரிய கோயில்களில் உள்ள, உதவித் தணிக்கை அலுவலர் பணியிடத்தை, தணிக்கை கண்காணிப்பாளர் நிலைக்கு உயர்த்தவும்; தலைமையிடத்தில் ஒரு 'கணக்காளர்' பதவி ஏற்படுத்தவும், அரசு முடிவு செய்துள்ளது. இத்

துறையால் நடத்தப்பட்டு வரும் 'திருக்கோயில்' மாத இதழுக்கு, ஒரு இளநிலை ஓவியர் பதவியை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த, அரசுக்கு ஆண்டொன்றுக்கு, ரூ.20.15 இலட்சம் கூடுதல் செலவு ஆகும்.

**திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள்**

இந்த அரசு பொறுப்பேற்ற பின், தற்போது ஆலயங்களின் முக்கியத்துவம் பற்றி ஓர் புதிய விழிப்புணர்ச்சி, மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் உள்ள பல கோவில்களில், திருப்பணிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள், அரசுக்கு வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. பொருளாதார அடிப்படையிலும் சரி, நிர்வாக அடிப்படையிலும் சரி, இவ்வனைத்துக் கோயில்களுக்கும், ஒரே சமயத்திலோ அல்லது உடனடியாகவோ, திருப்பணி செய்வது என்பது இயலாத காரியம். பொது மக்களோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ, தாங்கள் பரிந்துரை செய்யும் கோவில்களுக்குத் திருப்பணி உடனடியாகச் செய்யவில்லையே என்றும் நினைக்க வேண்டாம். இப்பணியினைச் செய்யவேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே தான், ஆலயங்கள் புனரமைப்புக்கு என்று 'முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி' என்ற தலைப்பில் ஒரு தனி நிதி திரட்டப்பட்டு வருகிறது. இந்த நிதியின் மூலம், தினந்தோறும் ஒரு கால பூஜையாவது செய்ய வேண்டும் என்பதற்கு, முயற்சிகள் மேற்கொண்டு உள்ளோம்.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் பெரும்பான்மையானவை, பழமையானவை. அவைகளுள் திருப்பணி செய்யப்படவேண்டிய ஆலயங்களைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) பாடல் பெற்ற ஆலயங்கள். அதாவது, ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பட்டு, போற்றப்பட்ட ஆலயங்கள். (2) வரலாற்றுச் சிறப்பு மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள். (3) ஆகம விதிகளின்படி, 12 ஆண்டுகட்கு ஒரு முறை திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டிய ஆலயங்கள்.

**அரசு மானியம்**

மேற்குறிப்பிட்ட திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்வதற்காக, ஓர் முன்னுரிமை (Priority) திட்டத்தைத் தயாரித்து, அதன்படி திருப்பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயங்களின் திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.45 இலட்சம் மானியமாக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு வழங்குகிறது. கடந்த ஆண்டும் இந்த மானியத்தோடு, அண்மையிலே கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவையொட்டி, 8 ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்காக, ரூ.12.50 இலட்சம் அரசு மானியமாகவும்,



★ அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அதிதைரியசாலி.

காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்காக, ரூ.15 இலட்சம் தனியாகவும், மொத்தத்தில் கடந்த ஆண்டில் அரசு மானியமாக மட்டும், ரூ.72.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளில், அரசு மானியமாகத் திருப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தொகைகளிலே, சென்ற ஆண்டு வழங்கப்பட்ட இந்த 72.50 இலட்சம் ரூபாய் தான் மிக அதிகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொது நலநிதி**

இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி, யாரேனும் தாமாக முன்வந்து வழங்குகின்ற நன்கொடைகள், மற்றும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் வருவாயிலிருந்து, ஒரு சதவீதம் (1%) ஆலயப் பொதுநல நிதி என்ற தலைப்பின் கீழ் தனியே வைக்கப்படுகிறது. இந்நிதி தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில், முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதியிலிருந்து சமூக நலப் பணிகளுக்காகவும், நலிந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காகவும், நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1991-ஆம் ஆண்டில் மட்டும் 54 திருக்கோயில்களின் திருப்பணிக்காக, ரூ.17.15 இலட்சம் இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நலிந்த மற்றும் நிதி உதவி**
**தேவையுள்ள ஆலயங்களுக்காகத்**
**திருப்பணி நிதி உதவித் திட்டம்**
**ரூபாய் ஒரு கோடி**
**வைப்பு நிதி**

கிராமங்களில் நிதி வசதியற்ற கோயில்கள் பல உள்ளன. இக்கோயில்களின் திருப்பணிக்காக, அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ரூபாய் ஒரு

கோடி பெறப்பட்டு, அதை வைப்பு நிதியாகக் கொண்டு, அதிலிருந்து பெறப்படுகின்ற வட்டித் தொகை மட்டும், மேற்படி நிதி வசதியற்ற சிறு கோயில்களின் திருப்பணிக்காகச் செலவிடப் படுகிறது. இந்த வைப்பு நிதி 1984-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1990-ஆம் ஆண்டு வரை திருப்பணிக்காக ஆலயம் ஒன்றுக்கு, ரூ.10,000 வீதம் உதவித்தொகை அளிக்கப்பட்டு வந்தது. 1991-ஆம் ஆண்டிலிருந்து இத்தொகை ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86-லிருந்து இதுவரை, மொத்தம் 619 ஆலயங்களுக்கு, ரூ.70.93 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப் பட்டுள்ளது.

### வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபங்கள்

வணிக வளாகங்களும், திருமண மண்டபங் களும் கோயில்களின் வருமானத்திலிருந்தும், வங்கிக் கடன் பெற்றும் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அன்றி, கோயில்களுக்கு நிரந்தரமாக நல்ல வருவாயையும் ஈட்டித் தரும். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் உபரி நிதி யிலிருந்து, மதுரையில் 'ஏழு கடல் அங்காடி' என்ற ஒரு வணிக வளாகக் கட்டடம், ரூ.93.92 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ஒரு வணிக வளாகக் கட்டடம், திருத்தணி நகரத்தில், பேருந்து நிலையத்திற்கு அருகில், ரூ.35 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான, டாக்டர் இ/ராதாகிருஷ்ணன் சாலை யில் உள்ள இடத்தில் ஒரு வணிக வளாகத்தை, ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டது. அதன் முதல் கட்டம், ரூ.34 இலட்சம் செலவில், கட்டி முடிக்கப்படும் தறு வாயில் உள்ளது. இரண்டாம் கட்டக் கட்டுமானப் பணிகள், இன்னும் ஒரு சில மாதங்களில் தொடங் கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக் கோயில் சார்பாக, இரண்டு திருமண மண்ட பங்கள் ரூ.48.50 இலட்சத்தில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. வடபழனியில் இரண்டு திருமண மண்டபங்களும், திண்டுக்கல்லில் ஒன்றும், காரைக் குடியில் ஒன்றும், ஆக மொத்தம் நான்கு திருமண மண்டபங்கள், ரூ.52.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் ஆறு திருமண மண்டபங்கள், ரூ.56 இலட்சம் செலவில் கட்டப் படவுள்ளன.

### திருப்பணி மற்றும் இதரக் கட்டுமானப் பணிகள்

மொத்தம் 611 ஆலயத் திருப்பணி வேலைகள், ரூ.10.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரு கின்றன. இன்னும் 266 பணிகளுக்கு, ரூ.10.41 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மேலும் 218 இதரக் கட்டுமானப் பணிகள், ரூ.7.69 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் ரூ.3.82 கோடி மதிப்பீட்டில், 103 கட்டுமானப் பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள் ளன. விரைவில் இப்பணிகளும் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மகாமகம்

கும்பகோணத்தில் நடைபெற்று முடிந்துள்ள மகாமகத் திருவிழாவினையொட்டி, அங்குள்ள 19 கோயில்களில், 11 கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாவும் நடை பெற்றுள்ளது. இதரக் கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. இதற்காக அரசு மானியமாக ரூ.12.50 இலட்சமும், ஆலய மேம் பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும், கோயில்



உபரி நிதியிலிருந்து ரூ.12 இலட்சமும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.5.77 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.40.27 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

**ஒரு காலப் பூஜை: அரசு நிதியுதவி**

தமிழகத்திலுள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் அனைத்தும், ஆரம்ப காலத்தில் மாமன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் நேரடிப் பராமரிப்பிலிருந்து வந்து, பின்னர் அவர்களால் வழங்கப்பட்ட மானியங்கள், சொத்துக்கள், ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில், பராமரிக்கப்பட்டு வந்தன. காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மாற்றும் பொருளாதார மாறுதல்களினாலும், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவற்றாலும், கோயிலுக்குக் கிடைத்து வந்த வருமானம் வெகுவாகக் குறைந்தது. இதனால் கோயில்களை உரிய முறையில் பராமரிக்க முடியாத நிலையேற்பட்டு, தினசரி விளக்கேற்றுதல், அன்றாடப் பூஜைகள் செய்தல், அர்ச்சகர் போன்ற சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தல் போன்றவைகளுக்குக்கூட, போதிய நிதி வசதியில்லாத சூழ்நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில், கோயில்களில் தினசரி ஒரு காலப் பூஜையாவது நடத்த வேண்டும் என்கின்ற நோக்கத்துடன், உபரி வருமானம் உள்ள கோயில்களின் வருமானத்திலிருந்து ரூ.5 கோடியை எடுத்து, வைப்பு நிதியாக வைத்து, ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஒவ்வொரு கோயிலுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.2,500 வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 4,462 கோயில்களுக்கு, ரூ.145.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள இத்திட்டத்தினால், நலிவுற்ற கோயில்களுக்குத் தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்து வருகிறது. இதற்கு நிரந்தரமாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, நலிவுற்ற கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு, எதிர் வரும் ஆண்டுகளில், தவறாது ஒரு காலப் பூஜையாவது நடத்த வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது.

இதற்காகக் கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தினால், அதில் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு காலப் பூஜையாவது செய்ய முடியும். ஒவ்வொரு கோயிலுக்கும் இந்த வைப்பு நிதியை, இந்து சமய அறநிலையத் துறையே வழங்க இயலாது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்களே இதற்கு உதவவேண்டும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள கோயில்களைப் பராமரிக்க முன்வர வேண்டும்.

பொது மக்களாக முன்வந்து, வைப்பு நிதி மூலதனமாக ரூ.25,000 செலுத்த இயலாத சூழ்நிலையில், அவர்கள் ரூ.12,500 செலுத்தினால், அரசின் சார்பில் மீதமுள்ள ரூ.12.500 உதவியாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக, சுமார் 400 கோயில்களுக்கு மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தலாமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ.12,500 நிதி உதவி என்ற அடிப்படையில், 400 கோயில்களுக்கு ரூ.50 இலட்சம் ரூபாயை அரசு வழங்கும். இந்தத் தொகை, முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அரசின் உதவியால் பயன்பெறும் கோயில்கள் 400 ஆக இருந்தாலும், மக்களின் ஆர்வத்தாலும், ஆதரவாலும், இந்தத் திட்டத்தில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள் பயன்பெறும் என்று நம்புகிறேன்.

பொதுமக்கள் இத்திட்டத்தை வரவேற்று, அவரவர் பகுதியிலுள்ள கோயில்களின் மறுமலர்ச்சிக்காக, முழுமனதுடன் இத்திட்டத்தில் பங்கேற்று, அவர்கள் சார்பாக ரூ.25,000 நிதியினைத் திரட்டி, வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களால் ரூ.25,000 நிதி திரட்ட முடியாத இடங்களில் உள்ள கோயில்களுக்கு மட்டுமே, அரசின் பங்காக ரூ.12,500 கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

### என் விருப்பம்

வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலை இல்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும், இதுதான் என் விருப்பம். நான் ஒருக்கால் மனிதனுக்கு அடிமையானேன்; ஆனால் மனத்திற்கு ஒருபோதும் அடிமைப்பட மாட்டேன். அப்பாவத்தைவிடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. நீங்கள் நன்கு பயின்று மனத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

-அண்ணல் காந்தியடிகள்

**வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி**

சென்ற ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு நான் பதில் அளித்தபோது வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று குறிப்பிட்டேன். இதற்கான கருத்துரு ஒன்று இந்து சமய அற நிலையத் துறையினரால் தயாரிக்கப்பட்டு, தற் போது அது அரசின் பரிசீலனையில் உள்ளது. வேதங்களைப் பற்றிய முழுமையான அறிவைப் புகட்டக்கூடிய கல்வி நிலையமாக இது அமைய வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்தக் கல்லூரி யில் வேதங்கள் ஆகம சாஸ்திரங்கள், உபநிட தங்கள், பன்னிரு திருமுறைகள், மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான பாடத் திட்டங்களையும், பிரிவு களையும் பற்றி 2.3.1992 அன்று நடைபெற்ற கோவில் நிர்வாக வாரியக் கூட்டத்தில் கலந்துரை யாடப்பட்டது. இதுகுறித்துக் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு வாரிய உறுப் பினர்களும், சமயச் சான்றோர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியை அமைப்பதற்காகத் தேவை யான நிலம் மற்றும் நிதி உதவி அளிக்கச் சில பெரியவர்களும் முன் வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கல்லூரியை அமைதி சூழ்ந்த இடத்தில் ஆன்மீக உணர்வுக்குத் தகுந்த இயற்கைச் சூழலில் அமைக் கப்பட வேண்டும் என்றும், அப்படித் தேர்ந் தெடுக்கப்படும் இடம் ஆழ்ந்த தியானத்திற்கும், வழிபாட்டிற்கும் உகந்ததாக இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப் படையில் இதற்குத் தேவைப்படும் 40 ஏக்கர் நிலத் தைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வரு கிறது.

தமிழகத்தின் கல்வி நிறுவனங்களில் தற்போது பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டு முறை இந்தக் கல்லூரியிலும் பின்பற்றப்படும். அதாவது ஆதி திராவிடருக்கு 18 விழுக்காடு இடங்களும், பழங் குடியினருக்கு ஒரு விழுக்காடு இடமும் பிற் படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு இடங்களும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படும் என்பதை மீண்டும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை எதிர்வரும் கல்வி ஆண்டில் தொடங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தக் கல்லூரியில் பல ஆராய்ச்சிப் பிரிவுகளைத் தொடங்கி, இதனை ஒரு பல்கலைக் கழகமாக உயர்த்தும் எண்ணமும் எங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள, தேவஸ்வம் என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம், 490 கோயில்களைப் பரா மரித்து வருகிறது. இதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் மானியமாக ரூ.17.70 இலட்சம் வழங்கி வருகிறது.

ஆலயங்களின் பராமரிப்புச் செலவு மிக அதிக மாக உயர்ந்துள்ளதாலும், இவ்வாரியத்திற்குக் கடந்த 34 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் இந்த மானியத் தொகை உயர்த்தப்படாததாலும், அவ்வாரியத்தின் கோயில்கள் பெரிதும் சீரழிந்து, சாதாரண பராமரிப்புப் பணிகள் கூட செய்ய முடி யாத நிலையில் இருந்தன.

இதனைப் போக்குவதற்காக 1992-93-ஆம் ஆண்டு முதல், இதற்குக் கூடுதலாக ரூ.10 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பரா மரிப்பு நிதியிலிருந்து, ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாகத் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் செலுத்தி, அதிலிருந்து கிடைக் கும் வட்டியிலிருந்து, இந்தக் கூடுதல் ஒதுக்கீடான ரூ.10 இலட்சம் கொடுக்கப்படும், என்பதை

## தேசிய கடற்போக்குவரத்துத் தினம்

ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதி 'தேசிய கடற்போக்குவரத்துத் தின'மாகக் கொண்டா டப்பட்டு வருகிறது. (National Maritime Day) இவ்வாண்டு கொண்டாடப்படுவது 29-வது தினம். கடல்வழிப் போக்கு வரத்தில் பண்டைய சோழர்கள் முதல் வ.உ. சிதம்பரனார் வரை இந்தியாவுக் குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

சென்னை, தூத்துக்குடி, பம்பாய், கல்கத்தா, கொச்சி, கண்ட்லா, மர்ம கோவா, நியு மங்களூர், விசாகப்பட்டிணம், பாரதீப், ஜவகர்லால் நேரு ஆகிய தன் னாட்சி பெற்ற துறைமுகப் பொறுப்புக் கழகங்கள் தற்போதைய கடல்வழிப் போக்குவரத்தில் முக்கியப் பங்கினை வகிக்கின்றன.

பம்பாயில் ரூ.24.36 கோடி செல வில் மெர்ச்சென்ட் நேவி அகாடமி ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. ஆண் டொன்றுக்கு 500 பேருக்கு இங்கு கடற்போக்குவரத்துப் பயிற்சி அளிக்கப் படும்.

ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா ரூ.100 கோடி மூலதனத்துடன் 1961, அக்டோபர் இரண்டில் துவக்கப் பட்டது.

பாரசீக வளைகுடாப் போரின்போது, ஈராக் மற்றும் குவைத்திலிருந்த இந்தியர்களை மீட்கும் பணியில் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் கப்பல்களான எம்.வி. திப்பு சுல்தானும், எம்.வி. அக்பரும் ஈடுபடுத்தப்பட்டன. எம்.வி. திப்பு சுல்தான் மூலம் 2,635 பேரும், எம்.வி. அக்பர் மூலம் 5,101 பேரும் தாயகம் வந்தனர்.

கடற்பயணத்துக்குக் கலங்கரை விளக் கங்கள் மிக அவசியமானவை. நாடு சுதந்திரம் அடைந்தபோது 17 கலங்கரை விளக்கங்களே இருந்தன. இன்றோ 155 கலங்கரை விளக்கங்களும், 14 ரேடியோ பேகான்களும் உள்ளன.



மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து, முதற்கட்டமாக 19 பாடல் பெற்ற கோயில்கள், மற்றும் 16 மங்களா சாசனம் செய்யப்பட்ட கோயில்களின் திருப்பணிக்காக, ரூ.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்**

திருவாரூரில் உள்ள, உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளை முறையாகப் பராமரிக்க, அந்த மையத்தில் குளிர் சாதன வசதி ஏற்படுத்த, ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 8,443 கோயில்களில், 66,534 உலோகத் திருமேனிகள் உள்ளன. இந்த உலோகத் திருமேனிகள் திருடப்பட்டால், அவற்றை எளிதில் கண்டுபிடிக்க உதவியாகச் சிலைகள் புகைப்படம் பிடிக்கப்பட்டு, தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு புகைப்படம் எடுக்கப்பட்ட சிலைகள், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பழம் பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் கீழ், பதிவும் செய்யப்படுகின்றன. இதுவரை 2,563 கோயில்களில், 23,910 சிலைகள் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றில், 3,883 கோயில்களைச் சேர்ந்த, 21,505 சிலைகளுக்குப் புகைப்படத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் புகைப்படத் தொகுப்புகளை விரைவில் பதிவு செய்யவும், எஞ்சியுள்ள 1,997 கோயில்களைச் சேர்ந்த 21,129 உலோகத் திருமேனிகளைப் புகைப்படம் எடுத்து, அவற்றைப் பதிவு செய்யவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது இந்த உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டிருக்கும் சுவாமி சிலைகளுக்கு, வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூஜை செய்யப்படுகின்றது. இனிமேல் அங்குள்ள சுவாமி சிலைகளுக்கு, வாரத்தில் மூன்று நாட்கள், அதாவது, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில், பூஜை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருக்கோயில்களின் நகைகள் மற்றும் விலை மதிப்புள்ள பொருள்கள் பாதுகாப்பு**

கோயில்களில் உள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் குறித்து, சரியான மதிப்பீடு செய்யவும், பாதுகாப்பாக அவற்றை வைத்திருப்பது குறித்தும், ஆய்ந்து வழிமுறைகளை எடுத்துரைப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து சில யோசனைகளைத் தெரிவித்தது. அதன் அடிப்படையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய அறிவுரைகள், அனைத்துக் கோயில் செயல் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டன. இது தவிர, கோயில்களுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தவும், திருடர்கள் எச்சரிக்கை மணி (Burglar Alarm) பொருத்தவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கோயில் பாதுகாப்புப் படை**

நமது பண்பாட்டைப் பாரம்பரியத்தினைப்

பிரதிபலிக்கின்ற திருக்கோயில்கள், நமது கலைப் பொக்கிஷங்களாகும். அவற்றையும், அவைகளுக்குச் சொந்தமான உடைமைகளையும் பாதுகாப்பது என்பதை தனது தார்மீகக் கடமையாக இவ்வரசு கருதுகிறது. கடந்த சில மாதங்களாகக் கோயில்களில் திருட்டு மற்றும் சிலைகள் உடைக்கப்படுவதாகச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட, இது குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்து இருக்கிறார்கள். இவைகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த, ஒரு சிறப்பு ஏற்பாட்டை, இந்து சமய அறநிலைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குரிய, எனது பதிலுரையில் அறிவிக்கிறேன், என்று தெரிவித்திருந்தேன்.

கோயில்களில் உள்ள விலையுயர்ந்த உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும், ஆபரணங்களையும் மற்றும் ஆராதனைக்குரிய பொருள்களையும், முழுமையாகப் பாதுகாப்பதற்காகக் காவல் துறையில், ''கோயில் பாதுகாப்புப் படை'' ஒன்று, தனியே ஏற்படுத்தப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்புப் பிரிவு விரைவில் அமைக்கப்படும். ஏற்கெனவே Idol Theft wing என்ற ஒரு பிரிவு காவல் துறையில் உள்ளது. சிலைகள் திருட்டுப் போனால், அவற்றைக் கண்டுபிடிக்க இப் பிரிவு செயல்படுகிறது. அதில், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு துணைக் காவல்துறைக் கண்காணிப்பாளர், 5 ஆய்வாளர்கள், 3 துணை ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல்நிலைக் காவலர்கள், 13 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆக மொத்தம் 30 பேர் மட்டுமே உள்ளனர். அது வேறு - இது வேறு. இந்தப் பிரிவு, திருட்டுக் குற்றங்கள் நடவாமல் தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் பிரிவு.

கோயில் பாதுகாப்புப் படைப் பிரிவில் ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் தவிர, மாதம் ரூ.750 தொகுப்பு ஊதியத்தில், 3000 முன்னாள் இராணுவத்தினரும் இந்தப் பிரிவில் நியமிக்கப்படுவார்கள். பணியில் அமர்த்தப்படும் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், 3000 முன்னாள் இராணுவத்தினருக்கும், அவர்கள் பாதுகாப்புப் பணியில் உள்ள நேரங்களில், துப்பாக்கி கொடுக்கப்படும். அவர்கள் காவல் பணிபுரியும் கோயில், எந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்றதோ, அந்தக் காவல் நிலையத்தில் காவலர்களாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் அங்கிருந்து சென்று, அந்தந்தக் கோயில்களில் காவல் பணிபுரிவார்கள்.

இந்த அமைப்பை ஏற்படுத்த, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5.28 கோடி செலவாகும்.

இந்தப் பெரும் செலவினை, நிதி வசதி இல்லாத காரணங்களினால், கோயில்கள் முழுமையாக ஏற்க முடியாது என்பதால், மொத்தச்செலவினத்தில் 10 சதவிகிதத் தொகையை மட்டும் கோயில்கள் ஏற்கும். மீதமுள்ள 90 சதவிகிதத் தொகையை, அரசே ஏற்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், மற்றும் அறநிலையத் துறை துணை ஆணையர், அல்லது உதவி ஆணையர் ஆகியோர், இந்தக் கோயில் பாதுகாப்புப் படைக் காவலர்கள் செய்யும் பணிகளை, மாதம் ஒரு முறை ஆய்வு செய்வார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளர், மாநிலக் காவல் துறைத் தலைவர், மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக்குழு, இப்பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிகளை ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருக்கோயில் பணியாளர்கள் நலன்**

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில், மொத்தம் 49,713 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் 4,166 பணியாளர்கள், உதவி ஆணையர் அல்லது செயல் அலுவலர்கள், மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள அதிகாரிகளின் கீழ் உள்ள, பெரிய கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட அரசு ஊழியர்களுக்கு நிகராக இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதர சிறிய கோயில்களின் பணியாளர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் பணியாற்றும் கோயிலின் வருமானத்தைப் பொறுத்து, ஊதியம் வழங்கப்படுகிறது. மொத்தத்தில், 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஆலயத்தின் ஆண்டு வருவாயில் 40 சதவீதத்திற்கு மிகாத அளவு, அவ்வாலயத்தினுடைய பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

நலிந்த திருக்கோயில்களில் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு, நிதியின்மை காரணமாக, ஊதியத் தொகை கொடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களினால், அவை வழங்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட நிலுவைத் தொகையை வழங்குவதற்காகப் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் உபரி நிதியிலிருந்து,

• தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் அறிஞர்களின் கருவூலங்களே புத்தகங்கள்.

—ஜோசப் அடிசன்

• என் மனதுக்குப் பிடித்த புத்தகங்களை மட்டும் என்னிடம் கொடுத்து என்னை வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தினாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.

—மாஜினி

ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியாகக் கொண்டு, ஆலய ஊழியர் நலத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஆண்டு வருமானம் ரூபாய் 25,000-க்குக் குறைவாக உள்ள ஆலயங்களில் பணிபுரிந்து வரும், மாத ஊதியம் ரூபாய் 300-க்கும் குறைவாகப் பெறுவோருக்கு, ஆண்டுதோறும் ஊதியத் தொகை நிலுவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பல கோயில் பணியாளர்கள் பயனடையும் வகையில், இந்தத் திட்டத்தில் ஆலய வருவாய் வரம்பினை உயர்த்தி, அதாவது ஆண்டு வருவாய் ரூபாய் 40,000 வரை உள்ள கோயில்களில் பணியாற்றும், ரூபாய் 400-க்கும் கீழ் மாதச் சம்பளம் பெறும் நிரந்தர மற்றும் முழுநேரப் பணியாளர்களின் சம்பளப் பாக்கியும், இந்த ஆண்டு முதல், ஆலய ஊழியர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் சுமார் 500 ஆலய ஊழியர்கள் பயன்பெறுவார்கள். இது தொடர்பாக 1.7.90 முதல், 30.6.91 வரை உள்ள காலத்திற்கான சம்பளப் பாக்கிகள், உடனடியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ரூபாய் 20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, 20 ஆண்டுகள் பணி செய்து, 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற, வேதபாராயணம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், மற்றும் அரையர் சேவை செய்த 100 பேர்களுக்கு, ஓய்வு ஓதியமாக மாதம் ரூ.300 வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். அத் திட்டம் இப்பொழுது செயல்படுத்தப்படுகிறது என்பதையும், அதேபோன்று, அர்ச்சகர்களாக 20 ஆண்டுக் காலம் பணி செய்து 60 வயதைக் கடந்து, ஓய்வு பெற்ற 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியமாக வழங்கும் புதிய திட்டமும் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 18 இலட்சம் செலவாகும்.

கோயில்களில் தற்போது பணிபுரியும் பூசாரிகளுக்கும், அர்ச்சகர்களுக்கும், முறையாக அன்றாடப் பூஜைகளையும், வழிபாடுகளையும் செய்வதற்கு உதவும் வகையில், அவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சித் திட்டம் (Refresher Course) ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இதற்காக ரூபாய் 8 இலட்சம் செலவிடப்படும். இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும், 500 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருக்கோயில்களின் அசையாச் சொத்துக்கள் மற்றும் பலதரப்பட்ட உரிமைகளைக் குத்தகைக்கு விடுதல் குறித்து**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள், மற்றும் பல தரப்பட்ட உரிமைகளைக் குத்தகைக்கு விடும்போது, சட்ட விதிகளின்படி பொது ஏலம் மூலம்தான் விடப்பட வேண்டும். மேலும் தனிப்பட்ட முறையில் (Lease otherwise than by public auction) குத்தகைக்கு விடுவதற்குத் தற்போதுள்ள விதிகளில் இடம் உள்ளது. இந்த விதியைக் கொண்டு, பெரும்பாலான குத்தகைகள் பொது ஏலத்தில் அல்லாமல், தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடுவதற்கு முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இதனால் கோயில்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் பெரும் அளவு குறைகிறது. எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டு, விதிகளில் திருத்தம் செய்து, அனைத்து அசையாச் சொத்துக்கள் மற்றும் பல தரப்பட்ட உரிமைக் குத்தகைகளில், தவிர்க்க முடியாத இனங்களைத் தவிர, மற்ற வழக்கமான இனங்களைப் பொது ஏலத்தில்தான் விடவேண்டும் என்ற சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்படும்.



ஒழுக்கம்

◦ உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட, உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது.

**சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தின் திருக்குளச் சீரமைப்பு**

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம் புராதன ஆலயங்களில் ஒன்றாகும். அந்தக் கோயிலின் பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் ஒன்று, 'தெப்பத் திருவிழா' ஆகும்.

அது கடந்த 1988-ஆம் ஆண்டிலிருந்து, குளத்தில் போதிய நீரின்மை காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் நடத்த இயலாமல் போய்விடுகிறது; இதனால் பக்தர்களின் உள்ளத்தில் ஒரு பெரும் குறை இருந்து வருகிறது. இக்குளத்தில் மீண்டும் தொடர்ந்து, அத்தகைய தெப்பத் திருவிழாவை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காகக் குளத்தில் போதுமான தண்ணீர் தேங்கி நிற்கும் வகையில் திட்டமிடப்பட்டு, அதற்கான முதல் கட்டமாக ரூ.35 இலட்சத்திற்கான மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும். நான் 13-ஆம் தேதியன்று தொடங்கி வைக்க உள்ளேன்; இப்பணி விரைவாக முடிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு ஜனவரித் திங்களில், தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இதைப் போலவே, தமிழ்நாட்டிலுள்ள முக்கியத் திருக்கோயில்களின் குளங்களுக்கும் படிப்படியாகத் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஆலய நிர்வாக வாரியம்:

# மாண்புமிகு முதல்வர் விளக்கம்!

ஆலய நிர்வாக வாரியத்தில், பெண்களையும் உடல் ஊனமுற்றோர்களையும் சேர்க்க வேண்டும் என்றும், காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆலய நிர்வாக வாரியத்திலோ அல்லது மாவட்டக் குழுவிலோ இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும், ஆலய நிர்வாக வாரிய உறுப்பினர்களுக்கும் மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கும், வாகன வசதி மற்றும் பயணப்படி வழங்குவது குறித்தும், குறிப்பிட்டுள்ளார்கள். மாநில ஆலய நிர்வாக வாரியத்திலும் மாவட்டக் குழுக்களிலும், தகுதியுடைய பெண்களையோ, உடல் ஊனமுற்றவர்களையோ, உறுப்பினர்களாக நியமிக்கத் தடையேதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆலய மேம்பாட்டில் அக்கறை கொண்ட, தர்ம சிந்தனை உள்ள பெருமக்கள், அனுபவம் பெற்ற அதிகாரிகள், மற்றும் ஆன்மீக மதத் தலைவர்கள், தகுதியின் அடிப்படையில் இக்குழுக்களில் இடம் பெற்றுள்ளனர். எனவே, இதில் இட ஒதுக்கீடு முறை இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டபோது, தவத்திரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்த வாரியத்தில் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அதனை விரும்பாத சூழ்நிலையில், அவருடைய சார்பாக ஒருவரை முன்மொழியுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. சுவாமிகளிடமிருந்து எந்தப் பதிலும் வராத காரணத்தினால், வாரியம் அமைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. பின்னர் நான் அனுப்பிய கடிதத்திற்கு, விருப்பமில்லை என்ற பதில் வந்தது. எனவே, குறை அரசிடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருப்பினும், அரசுக்கு ஒத்துழைக்க இணங்கிய சமயப் பெரியோர்களின் ஆசியுடன், வாரியம் அமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை அரசிடமும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமும் குவிந்து இருந்த பல அதிகாரங்கள் தற்போது இந்த நிர்வாக வாரியத்திடம் தரப்பட்டு இருக்கிறது என்பதையும், மிகுந்த அனுபவமும் அறிவாற்றலும் பெற்ற சமயச் சான்றோர்கள் மற்றும் பெரியோர்களுடைய வழிகாட்டுதலும் இந்த வாரியத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

### கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது

கடந்த 2.3.1992 அன்று நடைபெற்ற இந்த வாரியத்தின் முதல் கூட்டத்தில், 132 பொருட்கள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டு, சீரிய கருத்துப் பரிமாற்றத்திற்குப் பின் முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த முதல் கூட்டத்திலேயே 3.19 கோடி ரூபாய் அளவிலான திருப்பணித் திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியும், வழங்கப்பட்டுள்ளது. வாரியக் கூட்ட நடவடிக்கைகளில் பங்கு பெற்றவர்களுக்குத் தெரியும், அவர்களுடைய கருத்துக்களுக்கு எங்ஙனம் மதிப்புக் கொடுக்கப்பட்டது என்பதும், அவை எவ்வாறு சீர்தூக்கிப் பார்க்கப்பட்டது என்பதும்.

ஒரு சிலர் குறை கூறுவது போல, இந்தக் கோயில் நிர்வாக வாரியம் ஒரு ஆலோசனை வழங்கும் குழு அல்ல. இது அதிகாரம் பெற்ற, சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட, ஒரு முழுமைபெற்ற வாரியம் ஆகும்.

தனிப்பட்ட முறையில் முதல் அமைச்சர் அவர்களின் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்குச் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் வாழும் மக்கள் – ஏன், பிற மதத்தினரும் கூட மனமுவந்து நன்கொடையாக அளித்த தொகை இந்தக் குறுகிய காலத்தில் ரூ.3.96 கோடியைத் தாண்டிவிட்டது என்றால், அது பொதுமக்கள் இந்த அரசு எடுக்கும் முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் கொடுத்துள்ளனர் என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறது.

### விந்தையிலும் விந்தை

இத்தனை முயற்சிகளையும் பாராட்ட மனம் இல்லாமல் ஒரு சிலர் இந்த நிர்வாக வாரியத்தைக் குறை கூறியும் தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கும் அவற்றில் உள்ள விலை உயர்ந்த பொருட்களுக்கும் ஏதோ பாதுகாப்பு இல்லை என்பது போன்ற தவறான கருத்தைப் பரப்பி அதற்கெனத் தனியாக மக்கள் பாதுகாப்புப் படை ஒன்று நிறுவ வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியும் உள்ளனர். முந்தைய அரசுகள் எல்லாம் கோயில் நிர்வாகம் குறித்து எவ்வித ஆர்வமும், காட்டாதிருந்த காலத்தில் எல்லாம் வாளாவிருந்தவர்கள் இப்பொழுது குறை கூறத் தொடங்கி உள்ளார்கள் என்பது தான் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

தமிழகத்திலுள்ள கோயில்களின் மிக முக்கியச் சொத்தான விவசாய நிலங்களில் இருந்து வர வேண்டிய குத்தகைப் பாக்கித் தொகையை வசூலிக்க இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்ற தவறான குற்றச்சாட்டையும் கூறி வருகிறார்கள். தமிழ்நாடு குத்தகை விவசாயிகள்

பாதுகாப்புச் சட்டம் மற்றும் பொது அறநிலையக் கட்டளைகள் சட்டம் ஆகியவற்றின்பால் இருந்த தடை ஆணைகள் இப்போதுதான் நீக்கப் பட்டுக் குத்தகைப் பாக்கியை வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. மேலும், ஏற்கெனவே இருந்த 5 வருவாய் நீதிமன்றங்களோடு இந்த அரசு புதிதாக 6 வருவாய் நீதிமன்றங்களை அமைத்து இப் பணியை விரைவுபடுத்தியுள்ளது.

**அட்டைப்பட விளக்கம்:**

முதல் அட்டை:

பாவேந்தர் பாரதிதாசன் 102-வது பிறந்த நாளையொட்டி அவரின் திருவுருவப்படம் முகப்பை அலங்கரிக்கிறது (29.4.92)

நான்காம் அட்டை:

சென்னை அருங்காட்சியகத்தில், தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வை யிட்டார் (14.4.92)

நகர்ப்புறங்களில் உள்ள விலை உயர்ந்த நிலங்களைக்குறைந்தகாலக் குத்தகைக்கு விடுவது என்ற அரசின் முடிவைப் பற்றியும் சிலர் குறை கூறி உள்ளார்கள். நீண்டகாலக் குத்தகைக்குக் கோயில் நிலங்களை விடாமல், அதுவும் குறிப்பாகக் குத்தகைக்கு விடப்படுவதைத் தவிர்த்து, கோயில்களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் வரவேண்டுமென்று எடுக் கப்பட்ட நடவடிக்கைகளைக்கூட குறை கூறுகின்றனர். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகையை உயர்த்தலாம் என்பதைக்கூட உணராமல் பேசுகிறார்கள். இந்த நடவடிக்கைகள் நகர்ப்புறங் களில் உள்ள கோயில்களுடைய வருமானத்தைப் பெருக்குமே ஒழிய குந்தகம் விளைவிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோயில்களின் வருமானமும் செலவும்

கோயில்களுடைய வருமானத்தை ஒருபோதும் அரசு எடுத்துக் கொள் வது இல்லை. மாறாக எப்போதும் அரசுதான் நிதி உதவி வழங்கி வருகிறது. இந்தத் துறையினுடைய மொத்த வருமானமும் கோயில் களுடைய திருப்பணிகளுக்காகவும், நிர்வாகத்திற்காகவும், அன்றாடம் நடத்தப்பட வேண்டிய பூசைகளுக் காகவும் தான் செலவிடப்படுகிறது. சில நேரங்களில் கோயில் சிப்பந்தி களுக்குக்கூட மாதச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்பொழுது அரசு அவர்களுக்கு வேண்டிய உதவித்தொகைகளை வழங்கி வருகிறது.

கன்னியாகுமரி தேவஸ்வம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பணி புரியும் சிப்பந்திகளுக்குச் சம்பளம்கூடக் கொடுப்பதற்குப் பணம் இல்லாமல் 10 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக அரசு வழங்க வேண்டு மென்ற கோரிக்கையின் மீது ஆணைக் காகச் சமீபத்தில் என்னிடம் ஒரு கோப்பு வந்தது. அதில் அரசுச் செயலர் 3 இலட்சம் ரூபாய் மட்டும் வழங்கலாம் என்று பரிந்துரை செய் திருந்தார். கன்னியாகுமரி தேவஸ் வத்தின் தேவைகளை உணர்ந்த எங்கள் அரசு, அவர்களுக்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயைப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்து அதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் ரூபாய் கிடைக்க வழி வகை செய்து இருப்பதை ஏற் கெனவே தெரிவித்தேன்.

இதுபோன்று கடந்த 34 ஆண்டு களாக அவர்களுக்குக் கிடைக்காத உதவியைச் செய்தது தவறாகுமா? அல்லது அதில் ஏதேனும் உள் நோக்கம் இருக்கிறதா?

இப்படித் தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 40 ஆயிரம் திருக்கோயில் களையும் நன்கு பராமரிக்க வேண் டும்; அவற்றை இயற்கைச் சீற்றங் களிலிருந்தும் பிற அழிவுகளிலிருந் தும் காக்க வேண்டும்; சீரமைக் கப்பட வேண்டும்; அவற்றின் சொத் துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எங்களது அரசின் உயர்ந்த கொள்கைகளைச் சாடும் வகையில் கருத்துக்களை ஒரு சிலர் கூறுவது நியாயமா? இவர்கள் எதற்காக இவ் வாறு பேசி வருகின்றார்கள் என்பது தமிழக மக்களுக்கு நன்கு புரியும்; எனவே, இவர்களது வாதங்களைப் பற்றி நான் எப்பொழுதும் கவலைப் பட்டது கிடையாது.

### சமயத்தின் அடிப்படையில் வன்முறையாளர்கள்

கோயில்களில் திருட்டு மற்றும் சிலை உடைப்புப் போன்ற சம்ப வங்கள் அவ்வப்போது நடைபெற்று வருவதை நிரந்தரமாகத் தடுக்கவும் இந்த அரசு தனியாக ஒரு கோயில் பாதுகாப்புப் படையை ஏற்படுத்தி உள்ளதை ஏற்கெனவே தெரி வித்தேன். இந்தச் சூழ்நிலையில் திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும் தனிப்பட்ட நபர் களால் ஆங்காங்கே மக்கள் பாது காப்புப் படை உருவாக்கப்பட வேண் டும் என்று சிலர் கூறுவது அறி வார்ந்த செயலாகத் தெரியவில்லை.

சமய அமைதி பூத்துக் குலுங்கும் தமிழகத்தில் சமயத்தின் அடிப்படை யில் வன்முறையாளர்கள் தோன்று வதற்குத்தான் இந்த மக்கள் பாது காப்புப் படை வழி வகுக்கும் என்ப தால் இதனை முறியடித்து, முளை யிலேயே கிள்ளி எறியத் தேவை யான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு சிறிதும் தயங்காது என் பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

கோயில் நிர்வாக வாரிய உறுப் பினர்களுக்கு வாகன வசதி செய்து கொடுப்பது என்பது இயலாத காரியம். ஏனெனில், கோயில் நிர் வாக வாரியத்திற்கு மொத்தம் 18 உறுப்பினர்களும், ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் 12 உறுப் பினர்கள் வீதம் 17 மாவட்டக் குழுக்களும் உள்ளன. அத்தனைப் பேருக்கும் தனித்தனியே வாகன வசதி அளிப்பது என்பது, பொரு ளாதார ரீதியில் சாத்தியமாகாது. இருப்பினும் அலுவல்சாரா உறுப் பினர்களுக்குப் பயணப்படி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என் பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

—சட்டப்பேரவையில் 9.4.92 அன்று ஆற்றிய பதில் உரையிலிருந்து.

# பாரதிதாசன் கண்ட சமூக நீதி

புலவர் நடேச நாராயணன்

பாரதிதாசனார், பாரதிக்குப் பின் வந்த பைந் தமிழ்ப் பாவலர்; இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்; புதுவை தந்த புதுமைப் புலவர்; புரட்சிக் கவிஞர்.

ஆம் அவர் கண்ட உலகு, புதிய உலகுதான். அவரே பாடுகின்றார்;

> 'புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
> போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.'

அவ்வுலகில் சமூக நீதிகள் சிறந்து விளங்கக் காண லாம். அங்கே சாதிச் சண்டைக்கு இடமில்லை; சமயப் பூசலுக்கு வாய்ப்பில்லை; மூட நம்பிக்கைக்கு வாழ் வில்லை; முதலாளி தொழிலாளி என்ற பேதமில்லை.

அங்கே கல்வியற்ற மக்களைக் காண முடியாது; இளம் விதவையர்களின் இதயக் குமுறலைக் கேட்க முடியாது; கடவுளையும் மதத்தையும் தங்கள் நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சுயநலமிகளைப் பார்க்க இயலாது.

எந்தச் சமூகத்தில் நீதி நிலைபெறவில்லையோ அந்தச் சமூகம் பிற எவ்வகையில் உயர்ந்திருப்பினும் நிலைத்து வாழ முடியாமல் நிலை குலைந்து வாழ நேரும். அதனால்தான் நமது புரட்சிக் கவிஞர், அரசி யலைவிட பொருளாதாரத்தைவிட சமூக நீதியையே தமது இலட்சிய கீதமாக - இதயப் பாட்டாக - உயிர் மூச்சாகக் கொண்டு அறிவுறுத்தி வந்தார்.

அரசியல் பொருளாதாரம் அனைத்தும் சமூகத்திற் கேயன்றோ? எனவே அரசியல் பேசும் இடமாயினும் சரி, பொருளாதாரம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி, குடும்பம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி; அவர் சமூக நீதிகளை வற்புறுத்தத் தவறவே இல்லை.

சமூக நீதிகளைச் சுருதியாக வைத்துக் கொண்டுதான் அவர் அரசியல் பொருளாதாரம், குடும்பம் எனும் பாடல்களைப் பாடினார். இந்த வகையில் அவர் பாடல்கள் அபஸ்வரமில்லாமல் சுருதியோடு இயைந்தே இருந்தன.

சமூக நீதிகளை வற்புறுத்தி மறுமலர்ச்சிக்கு ஆக்கம் தேடிய காரணத்தினால்தான் பாரதிதாசனார் 'புரட்சிக் கவிஞர்' எனப் புகழாரம் சூட்டப் பெற்றார்.

சாதியிலும் சமயத்திலும் வெறி கொண்டவர்கள் மிகுதியாக இருக்கும் சமூகத்தில் நீதி என்பது இடம் பெற இயலாது, நிம்மதி என்பது நிலைபெற முடியாது. எனவேதான் நமது புரட்சிக் கவிஞர், மக்களில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சமூக அநீதிகளில் மிகப் பெரிய அநீதியாகும் என்று கருதினார்.

கடல் மேற்குமிழிகள் என்ற நூலிலே செம்மறி வாயிலாகச் செப்புகின்றார் நம் கவிஞர்...

> 'திறல் நாட்டு மக்கள் தம்பால்
> மெய்ம்மையே புகல்வேன்; மக்கள்
> மேல் என்றும் மட்டம் என்றும்
> பொய்மையால் புகலும் ஏட்டை
> புகலுவார் தம் ஏற்பாட்டை
> இம்மா நிலத்தில் மாற்ற
> ஆவன இயற்றித் தீர்வேன்
> இதுவே நான் மக்கட்கு இந்நாள்
> இயற்றிட எண்ணுந் தொண்டு'

என்று புகல்கிறார். இதிலிருந்து சாதி வேறுபாட்டை ஒழிப்பதில் - சமூக நீதியை நிலைநாட்டுவதில் - எவ்வளவு அக்கறை காட்டியுள்ளார் என்பதை அறியலாம்.

> இருட்டறையில் உள்ளதடா
> உலகம் - சாதி
> இருக்கின்ற தென்பானும்
> இருக்கின்றானே'

என்று கொதிப்புடன் வியக்கிறார்.



பாவேந்தர் பாரதிதாசன் 102-வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப் படுகிறது.



பாவேந்தர் பாரதிதாசனின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசனின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (29.4.1992).

எல்லோரும் தாயின் கர்ப்பத்திலிருந்து தோன்றிய வர்கள்தாம்; அந்தத்தாய் தீண்டத்தகாதவர்களையும் ஈன்று தருவதுண்டோ? எனவே தீண்டத் தகாதவர் எனச் சிலரை ஒதுக்குவது சமூகத்திற்கு இழைக்கும் அநீதியல்லவா?

அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தோரன்றோ - சகியே
கர்ப்பத்தில்வந்தோரன்றோ?
தீண்டும் மக்களின் அன்னை
தீண்டாரையும் பெற்றாளோ
ஈண்டிதை யார் நம்புவார் - சகியே
ஈண்டிதை யார் நம்புவார்?'

சிலரை, பிறப்பால் தாழ்ந்தவர் எனக்கூறி அவரைத் தீண்டத்தகாதவர் என ஒதுக்கியதோடன்றி எல்லா உயிர்களையும் வேறுபாடின்றிக் காக்கும் ஆண்டவனின் பொதுமன்றத்திலும் அவர் நுழைவதற்கு அருகதையற்ற வர்கள் என்றும் விதி வகுத்திருந்தார்கள். இது நம் சமூகத்தின் ஊடுருவிட்ட அநீதியாக இருந்தது. இதையும் கண்டிக்கத் தவறவில்லை நம் புரட்சிக் கவிஞர்.

இறைச்சியுண்ணும் நாயும் காகமும் கோயிலில் நுழைவதால் வராத தீட்டு, மக்களில் சிலர் மட்டும் போவதால் வந்திடுமோ? நாய்க்கும் காகத்திற்கும் தரும் மதிப்புக் கூடவா மனிதனுக்கு இல்லை என்று கேட் கிறார்.

'குக்கலும் காகமும் கோயிலிற் போவதில்
கொஞ்சமும் தீட்டில்லையோ - நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?'

தேகம் சுமை என்று கருதும் ஞானியர் நிரம்பிய நாடு நம்நாடு, இந்த நாட்டில்தான் அதேதேகத்தைக் காரண மாக வைத்து பேதத்தை வளர்க்கிறார்கள். எத்தனை கேவலமான புத்தி என்று இகழ்கிறார் புரட்சிக் கவிஞர்.

தேகம்சுமை நமைச் சேர்ந்ததில்லை என்று
செப்பிடும் தேசத்திலே - பெரும்
போகம் சுமந்து உடற்பேதம் கொண்டோம் மதி
போயிற்று நீசத்திலே.'

இமய முதல் குமரி மட்டும் உள்ளோர் அனைவரும் ஒரு சாதியே. நாம் அனைவரும் பாரத நாட்டின் படை மக்களே - இந்த உணர்ச்சி தோன்றினால்தான் ஒருமைப்பாடு நிலைக்கும்; வெற்றி பல விளைக்கும்.

கோரும் இமாசலமுதல் தெற்கில்
கொட்டும் புனல் நற்குமரி மட்டும்
இருப்போர் - இவர்
யாருமொரு சாதி எனவும் - இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லை
எனவும் - நம்
பாரத நற்றேவி தனக்கே - நாம்
படைமக்கள் எனவும் நம்மிடை
இலக்கணம் - அந்த
ஒருணர்ச்சி தோன்றியவுடன் - அந்த
ஒற்றுமையன்றோ நமக்கு வெற்றியளிக்கும்'

இவ்வாறாகச் சாதிபேதத்தை நீக்குவது, மக்கள் சரிநிகர் சமானம் என வகுப்பது சமூகநீதிகளில்முக்கியமான நீதி என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமூக அநீதிகள் எந்த உருவத்தில் வந்தாலும் அதை இனங்கண்டு சாடத் தவறவில்லை நம் மறுமலர்ச்சிக் கவிஞர். கடவுளின் பெயரால் ஆகட்டும், சமயத்தின் பெயரால் ஆகட்டும்,சமூக நீதிகள் பாதிக்கப்படுமானால் - தகர்க்கப்படுமானால் அவர், அந்த அநீதிகளைப் புறக்கணிக்கத் தவறவில்லை. ஏனெனில் அவருக்குத் தெரியும் சமூக நீதிகளைத் தகர்ப்பதன் வாயிலாகத் தன்னலத்தைக் காத்துக் கொள்ளக் கருதும் சுயநலமிகள் தாம் சமயத்தையும் கடவுளையும் குறுக்கே இழுத்து வருகிறார்கள் எனக் கருதினார். எனவே தயங்காமல் அவற்றைப் புறக்கணித்தார். சிலரது மனம் புண்படுமே என்பதற்காக அவர் தயங்கவில்லை; சமூகம் பண்பட்டால் போதும் என்று கருதினார்.

உயர்ந்த சாதியாருக்கு ஒரு கடவுள், தாழ்ந்த சாதி யாருக்கு ஒரு கடவுள், பணக்காரருக்கு ஒரு கடவுள், ஏழைக்கு ஒரு கடவுள் என்று கடவுளையும் பிரிக்கும் கொடுமையைக் கண்டார் கவிஞர். சினம் பிறக்கிறது!

சிரிப்பும் வருகிறது அவருக்கு. நகைச்சுவையோடு தன் கருத்தைத் தெரிவிக்கிறார்.

என்னை அளித்தவர் ஓர் கடவுள் மற்றும்
ஏழைக்கோர் கடவுள் எனில்
முன்னம் இரண்டையும் சேர்த்துருக்குங்கள்
முளைக்கும் பொதுக் கடவுள்'

இளம் விதவையர்களின் ஏக்கப் பெருமூச்சை - இதயக் குமுறலை - இரத்தக் கண்ணீரை - கேட்டும் பார்த்தும் உணர்ந்தும் நெஞ்சம் நொந்தவர் நம் புரட்சிக் கவிஞர். கைம்பெண்கள் கலங்குவது சமூக அநீதியாகும். அந்த அநீதியை ஒழித்து அவர்களை மறுமணம் செய்து கொள்ள அனுமதித்துச் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் எனச் சங்கென முழங்கினார்; முரசென அறைந்தார்.

இதோ இளம் விதவை ஒருத்தி தன் குமுறலை - ஏக்கப் பெருமூச்சை - வெளியிடுவதைக் கேளுங்கள்.

'எனை மணந்தார் இறந்தார் என் குற்ற மல்ல
இறந்தவுடன் மங்கல நாண் நல்லாடைகள்
புனைமலர் குங்குமம் அணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?'

என்று கேட்கின்றாள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் காதலில் மாற்றம் இருக்க முடியுமா? வயது முதிர்ந்த கிழவன், தன் மனைவி இறந்து விட்டால் வேறொரு இளம் பெண்ணைத் தேடி மணக்கிறான். இதைச் சமூகம் அனுமதிக்கிறது. ஆனால் இளமையிலேயே தன் கணவனை இழந்துவிட்ட கைம் பெண், வேறொரு ஆடவனை மணக்கக் கூடாதாம். இதுதான் சமூக நீதியா? கிழவனுக்கு மட்டுந்தான் காதலுணர்வு இருக்கும்; இந்த இளம் விதவைக்குக் காதலுணர்வு இருக்காது என்பது எண்ணமா?

பாடாத தேனீக்களை, உலவாத தென்றலை, பசியாத நல்வயிறை யாரேனும் பார்த்திருக்க முடியுமா என்று கேட்கிறார்.

## வாசனைப் பொருட்கள்

**● வாசனைப் பொருட்கள் என்றாலே நினைவுக்கு வருவது சுக்கு, ஏலம், கிராம்பு முதலியன. பண்டைக் காலத்திலிருந்தே வாசனைப் பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்தும் பயன்படுத்தியும் வருகிறது நம்நாடு.**

**உலக நாடுகளுக்கு 40,000 கோடி டன் வாசனைப் பொருட்கள் தேவை. இதில் இந்தியாவில் மட்டுமே 25 சதவீதம் நுகரப்படுகிறது. வாசனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மத்திய அரசின் ஒருங்கிணைந்த வாசனைப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**1990-91-இல் வாசனைப் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.238.67 கோடியும் 1989-90-இல் ரூ.275-76 கோடியும் 1988-89-இல் ரூ.274.81 கோடியும் அன்னியச் செலாவணி கிடைத்தது.**

'ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?'

என்று கேட்கிறார்.

இளங் கைம்பெண் ஒருத்தி மறுமணம் செய்து கொள்ளச் சாத்திரம் தடையாக இருக்குமானால் அச் சாத்திரத்தை ஒதுக்குங்கள், சமூகத்தில் நீதியை நிலை நாட்ட முயலுங்கள் என்கிறார்.

இனி, ஆடவர்தான் கல்விகற்க உரியவர் என்றும் அடுக்களை வேலைகளை மட்டுமே செய்யும் பெண் களுக்குக் கல்வி தேவையில்லை என்றும் வேறுபாடு காட்டினர். இதுவும் அநீதியே என்றுணர்ந்தார் கவிஞர். பெண்ணடிமை நீங்க வேண்டும் என எண்ணினார்; ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் வாழ வேண்டும் எனக் கருதினார். அதனால் பெண் கல்வியை வற்புறுத்திப் பாடினார்.

வளர்ப்பவர்கட்குக் கல்வி அறிவு இருந்தால்தான் வளர்க்கப்படுபவர்கள் நல்லவர்களாக விளங்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

'கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்; அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை.
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவில வோநான்?'

என்று கேட்பதன் மூலம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.

பெண்கள் அடிமை வாழ்வு வாழ்வதை விரும்பாதவர் நம் புரட்சிக் கவிஞர்.

'பெண்ணடிமை தீரு மட்டும்
பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல்
முயற் கொம்பே'

என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் நம் கவிஞர்.

நாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டுமா? முதலில் நாம் பெண்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டு விடுதலையும் நாம் பெற முடியும். பெண்கட்குச் சுதந்திரம் தராதவரை நம் மண்ணுக்கும் சுதந்திரம் கிடைக்காது என்கிறார்.

குடியரசு நாட்டில் சமூக நீதிகளைச் சம்பிரதாயமாக மட்டும் வற்புறுத்தினால் போதாது; சட்டங்களாக ஆக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பாரதிதாசன் கண்ட உலகு பரந்து விரிந்த உலகு. அது அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு திகழ்வதாகும்.

# கூட்டுறவு வங்கி விவசாயக் கடன்: வட்டி தள்ளுபடி

## சட்டமன்றத்தில் 28.4.1992 அன்று மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பு.

தமிழ்நாடு அரசின் புதிய ஊக்கத் திட்டம் பற்றிய ஒரு அறிவிப்பினை இப்பொழுது செய்ய விரும்புகிறேன்.

தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கவும், கூட்டுறவு வங்கிகளைக் காப்பதோடு, அவற்றின் பயன்பாட்டை விரிவாக்கவும், பல்வேறு கருத்துக்களை இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள், வட்டி மற்றும் அபராத வட்டிகளை, உரிய நேரத்தில் செலுத்த முடியாத நிலையில் இருப்பதோடு, அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் தொடர்ந்து அதிகரித்து, அவர்களால் அவற்றைத் திருப்பிக் கட்ட இயலாத நிலை உள்ளது. மேலும், உரிய காலத்தில் கடன்களைத் திரும்ப வசூல் செய்யாததால், கடன் வழங்கும் வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து மீண்டும் கடன் பெற்று, விவசாயிகளுக்குக் கடன் அளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளையே, இந்த நிலை பலவீனப்படுத்தி விடுகிற பின்னணி எழுந்துள்ளதால், அரசு இதில் தலையிட்டு, விவசாயிகள் செலுத்த வேண்டிய விவசாயக் கடன், வட்டி மற்றும் அபராத வட்டிகளை முழுமையாகத் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என, உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தபோது, இதனைப் பரிவுடன் அரசு பரிசீலனை செய்யும் என்று நான் தெரிவித்தேன்.

அந்த உறுதிமொழியின் தொடர் நடவடிக்கையாக, இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனை செய்தது. மாநிலத்தில், கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் விவசாயக் கடன்கள் அனைத்திற்கும், நாம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, NABARD, அதாவது National Bank for Agriculture and Rural Development நிறுவனத்தைத்தான், எதிர்நோக்கி இருக்கின்றோம். எனவே, கூட்டுறவு வங்கிகள், NABARD நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும், வகுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டே, செயல்பட வேண்டிய கட்டாய நிலை உள்ளது.

NABARD நிறுவனம், விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் தொகைகளைத் தள்ளுபடி செய்யும்பொழுது, வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும் என்ற நல்ல பழக்கம், விரைவில் மறைந்துவிட வழி வகுக்கின்றது என்றும், இதனால் கடன் வசூல் பெருமளவு பாதிக்கப்படுவதுடன், கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கவே முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது என்றும், அது மட்டுமின்றி, உண்மையிலேயே வசதி உள்ளவர்கள் கூட இதுபோன்ற தள்ளுபடிச் சலுகைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, தாங்கள் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாமல் இருக்க, இது அவர்களை ஊக்குவிக்கும் என்றும் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு, இத்தகைய தள்ளுபடியினால் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில், NABARD நிறுவனம் மிகவும் கண்டிப்பாக உள்ளது. அவ்வாறு கூட்டுறவு வங்கிகளைப் பாதிக்கும் வகையில், தள்ளுபடி ஏதும் செய்யப்பட்டால், NABARD நிறுவனம், மாநிலத்திற்கு வழங்கி வரும் கடன் உதவியை, முற்றிலுமாக நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும், கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில், தேவையான உதவிகளைச் செய்யவும், அதே நேரத்தில் கூட்டுறவு வங்கியின் செயல்பாடு, எந்த விதத்திலும் பாதிக்கப்படாத வகையில் NABARD நிறுவனத்தின் சட்டத் திட்டங்களும், நிபந்தனைகளும் மீறப்படாத வகையில், ஒரு திட்டத்தை உருவாக்கவும் அரசு முடிவு செய்து உள்ளது.

தமிழக விவசாயிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கி, முழுமையாக உதவி செய்து, அவர்கள் தங்களது கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர்களைக் கடன் சுமையிலிருந்து முழுமையாக விடுவிப்பதுடன், கூட்டுறவு வங்கிகளும் முழுமையாகத் தங்களின் வசூல் குறியீட்டை எய்தித் தொடர்ந்து கடன் வழங்கும் தகுதியைப் பெறக்கூடிய நிலையை ஏற்





## உழைப்போம்! உயர்வோம்!
## —டாக்டர் எம்.ஜி.ஆர்.

**உழைக்கும் வர்க்கத்திற்கே இவ்வுலகம் உரிமையானதென்பதை உணர்த்திய நாள்தான் மே முதல் நாள். அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரில் 1886-ஆம் ஆண்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி உரிமை முழக்கம் எழுப்பினர். தொழிலாளர்களின் உரிமை வாழ்விற்குத் தங்களுடைய செயற்கரிய தியாகத்தால் அடித்தளம் அமைத்தனர். இரத்தத்தை ஆறாக ஓடவிட்டு, உயிர்களைப் பலிகொடுத்து, ''உழைக்கும் மக்களே உலகின் உண்மையான உரிமையாளர்கள்'' எனும் தத்துவத்தை நிலைநாட்டினர்.**

**சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புகளை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்; புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக முன்னோடிகளாக விளங்கிடுவீர்.**

**உழைப்போம்! உயர்வோம்! உழைப்பால் உலகை உயர்த்துவோம்! உழைக்கும் மக்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்பதை உலகிற்கு உணர்த்துவோம்! ஒற்றுமையைக் குலைக்கும் தீய சக்திகளை ஒதுக்குவோம்! சமுதாயச் சமதர்மச் சிற்பிகளாக உழைக்கும் வர்க்க உடன் பிறப்புகளே கடமையாற்ற முன்வருவீர்! உழைப்பின் மேன்மையை, உழைப்பாளரின் உயர்வை உலகம் உணரச் செய்வோம்!**

---

**படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், அரசு பின்வரும் முடிவினை எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

தமிழக விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன், வட்டி, மற்றும் அபராத வட்டி முழுவதையும், வருகின்ற 30.6.92-க்குள் திருப்பிச் செலுத்த உதவும் வகையில், அரசு பின்வரும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடும்.

இந்தத் திட்டத்தின் கீழ், 1.7.91-அன்று இருந்த நிலவரப்படி குறுகிய கால, மற்றும் மத்தியக் காலக் கடன்களில், தவணை கடந்த அசல் தொகையையும், அதன்பிறகு 1.7.91-முதல் 30.6.92 வரை உள்ள காலத்தில் வசூலுக்குத் தகுதியாகும் தொகைகள் அனைத்தையும், விவசாயிகள் 30.6.92-க்குள் தவறாது செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் விவசாயிகளுக்கு, 1.7.92-அன்றுள்ள நிலவரப்படி, தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை, அரசே அவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கும்.

இந்த ஊக்கத் தொகைத் திட்டம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட, குறுகிய கால மற்றும் மத்தியக் காலக கடன்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த ஊக்கத் தொகை ஒவ்வொரு விவசாயிக்கும் காசோலை (Cheque) மூலமாக நேரடியாக வழங்கப்படும். அரசு வழங்கும் இந்த ஊக்கத் தொகையை, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிகளுக்காக, பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயிகள், 1.7.91-அன்று இருந்த நிலவரப்படி, தவணை கடந்த அசல், அதன் பின் 30.6.92-வரை வசூலுக்குத் தகுதியான அனைத்துத் தொகைகளையும் செலுத்தும் பட்சத்தில், அரசு 1.7.91-அன்று நிலவரப் படி, தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி, விவசாயிகள் மூலமாக வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மேலும், 1.7.91-அன்று நிலுவையில் இருந்த தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டியை, 1.7.91-க்குப் பிறகு செலுத்திய விவசாயிகளுக்கும், அதற்கு ஈடாக ஊக்கத் தொகை இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன்கள் மீது, 1.7.91 அன்று நிலவரப்படி நிலுவையில் இருக்கும் தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டித் தொகைகளுக்குச் சமமான தொகையை, நேரடியாக விவசாயிகளுக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுக்க, 69.07 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். இந்தத் திட்டத்தின் மூலமாக, தமிழகத்திலுள்ள 13 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டத்தை, அரசின் நிதி நிலைமை கடுமையாக இருக்கும் தற்போதைய சூழ்நிலையிலும், தமிழக விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், எங்கள் அரசு அறிமுகப்படுத்த உள்ளது. நீண்ட நாட்களாகக் கடன் சுமையால் தத்தளித்து வரும் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் சுமையில் ஒரு பகுதியையேனும் எங்கள் அரசு ஏற்றுக் கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்வதுடன் அவர்கள் வளமுடன் வாழ வழி வகுத்துள்ள இந்தத் திட்டத்தை, இம்மாமன்றத்தில் அறிவித்ததில் பேருவகை அடைந்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(சட்டமன்றத்தில் 28.4.1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு)**

# சத்யஜித்ரே மறைவு



'பாரத ரத்னா' பட்டம் பெற்றவரும், உலக அரங்கில் இந்தியத் திரைப்படங்களுக்குப் பெருமை தேடித் தந்தவருமான பிரபல வங்காளத் திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித்ரே 23.4.'92 அன்று கல்கத்தாவில் மருத்துவமனை ஒன்றில் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 71.

1955-ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலில் நுழைந்த சத்யஜித்ரே, முதன்முதலாகத் தயாரித்த 'பதர் பாஞ்சாலி' என்ற வங்காள மொழிப்படம் உலகப்பட விழாக்களில் பல பரிசுகளைப் பெற்றது. அதைத் தொடர்ந்து அவர் தயாரித்த எல்லாப் படங்களும் சர்வதேச அளவில் புகழ் பெற்றன.

சத்யஜித்ரே உடல் நலக் குறைவின் காரணமாக கடந்த ஜனவரி மாதம் இறுதியில் கல்கத்தாவிலுள்ள மருத்துவ மனை ஒன்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போதே, உலகில் திரைப்படங்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான 'ஆஸ்கார் விருது' அவருக்கு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அண்மையில் இந்திய அரசு நமது நாட்டின் மிகப் பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை சத்யஜித்ரேக்கு வழங்கிச் சிறப்பித்தது.


## தமிழரசு

சந்தா விவரம்

தமிழ் ......... ஓராண்டு = ரூ.24

அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :

உதவி இயக்குநர் : தமிழரசு,

(விற்பனை மற்றும் விநியோகம்)

அரசினர் தோட்டம், சென்னை-600 002.


சத்யஜித்ரே 1921-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். கல்கத்தாவிலுள்ள மாநிலக் கல்லூரியில் படித்து 1940-இல் பட்டம் பெற்றார். பிறகு சாந்தி நிகேதன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஓவியக் கலை பயின்றார். இளம் வயதிலேயே திரைப்படத் துறையிலும் இசைத்துறையிலும் நாட்டம் கொண்டவர் ரே.

'ஆஸ்கார்' விருது பெற்ற சத்யஜித்ரேக்கு, தமிழ்நாடு சட்டப்பேரவை 8.4.'92 அன்று பாராட்டு தெரிவித்தது.

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருமதி. பிஜோயா ரே அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் செய்தியில் குறிப் பிட்டிருப்பதாவது:

"இந்தியத் திரைப்படத் துறையில் புரட்சிகரமான கருத்துக்களைத் துணிச்சலுடன் படம் பிடித்துக் காட்டிய டாக்டர் சத்யஜித்ரே அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு நான் மிகவும் துயரமடைந்தேன்.

"அவருடைய மறைவு, இந்தியத் திரைப்படத் துறையில் மிகப் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப யாராலும் முடியாது.

"புரட்சிகரமான தமது திரைப்படங்களின் மூலம் இந்தியத் திரைப்படத் துறையை மாற்றியமைத்து அதன் மூலம் சர்வதேசப் பார்வையாளர்கள் மத்தியில் இந்தியா மீது ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார் டாக்டர் ரே. தன்னுடைய உணர்வு பூர்வமான கலைப்படைப்புகள் மூலம் இந்தியத் திரைப்பட வரலாற்றில் தனக்கென்று ஒரு தனி இடத்தை உருவாக்கி கொண்டார். சத்யஜித்ரேயை இழந்து தவிக்கும் திருமதி பிஜோயா ரே மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."


ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

Magenta


தமிழரசு
பதிவு எண் : M. 8676
Licence No. TN/MS(C)/PP-